# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு

**V**

**பகுதி 2**

Kerala Reader - Tamil (AT)
Standard - V
Part - 2

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

## தமிழ்

## 5

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

பாடப்புத்தகங்கள் அறிவின் சுரங்கங்கள். அங்கிருந்துதான் அறிவை அகழ்ந்தெடுக்கவேண்டும் என்றொரு நிலை இருந்தது. இன்று அத்தகையதொரு மரபுநிலை மாறிவிட்டது. பாடநூல் என்பது அறிவின் மொத்த உறைவிடமல்ல. அது அறிவைத் தேட உதவும் கருவி மட்டுமே. அந்தக் கருவியை முறையாகப் பயன்படுத்தி, அறிவின் பரந்த உலகைப் பார்க்கவேண்டும். தேவையானவற்றைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். அறிவு வழங்கப்படுவதும் அல்ல; வாங்கப்படுவதும் அல்ல; அறிவு சுயமாக ஆக்கப்படுவதாக அமைய வேண்டும். அதுவே தற்போதைய கல்விக் கொள்கை. கற்றல் – கற்பித்தல் என்ற நிலையும் இன்றில்லை. கற்றல் மட்டுமே. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையேயான கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் செயல்பாடுகள் மூலமாக அறிவு உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு அடைகின்ற அறிவு மறப்பதில்லை; நிலைத்து நிற்கும்.

காலகட்டத்திற்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமான புதிய கல்வித் திட்டத்தைக் கல்விக் கொள்கையைத் திறம்படச் செயல்படுத்தி, அதன் நோக்கத்தை எட்ட வேண்டுமானால், நாம் கொடுக்கின்ற கருவிகளிலும் புதுமை இருக்கவேண்டும். அதற்காகப் பாடங்களின் உள்ளடக்கம், அமைப்பு, சொல்லும்முறை, மொழி நடை முதலான எல்லா நிலைகளிலும் மிகுந்த கவனம் செலுத்தியாக வேண்டும். இவற்றையெல்லாம் நன்குணர்ந்த கல்வியாளர்கள், மொழி வல்லுநர்கள், ஆசிரியப் பெருமக்கள் ஆகியோரின் அரும்பணியில் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

மொழித் தேனைப் பருகுங்கள்! மொழித்திறனை வளருங்கள்!!

வாழ்த்துகள்!

**முனைவர் ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Committee

## Tamil - V (Part 2)

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.) University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Shini, S.**
Associate Professor of Tamil, University College, Thiruvananthapuram.

### Experts

**Dr. Ayyappan, N.**
Associate Prof. of Tamil, St. Hindu College, Nagercoil.

**Dr. Manoharan, N.**
Assistant Prof. of Tamil, Govt. College, Chitur, Palakkad.

**Dr. Raja Sekaran, L.**
Assistant Prof., Dept. Folklorists and Tribal Studies, Central University, Karnadaka.

### Members

**Fathima Begum, A.J.,** PD Teacher, Govt. Tamil VHSS & TTI Chalai, Thiruvananthapuram.
**Hari Prakas, R.**, PD Teacher, GUPS, Menonpara, Palakkad.
**Jasmine, J.**, HSST (Rtd.), CPM GHSS, Peermade, Idukki.
**Manivannan, C.**, PD Teacher (Rtd.), Govt. Tamil LPS, Chalai, Thiruvananthapuram.
**Monikandan, T.**, Principal (Rtd.) CPM GHSS, Peermade, Idukki.
**Mini R Wilson**, UPST, Govt. Fort UPS, Manacaud, Thiruvananthapuram.
**Mohamed, D.**, PD Teacher, GUPS, RB Kudam, Palakkad.
**R. Selvakumar.**, HM ALPS Periyavari, Idukki.
**Selvam, D.**, UPST, GUPS Vandiperiyar, Idukki.
**Sreemurughan, D.**, UPST GHSS, Anakkara, Idukki.
**Bibin**, Artist, Nemam, Thiruvananthapuram.
**Bimal Kumar**, Drawing Teacher, Anchalamoodu, Kollam.
**Joban,** Artist, Nalanchira, Thiruvananthapuram.
**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Santhosh, K.,**, Drawing Teacher, GHS, Neduva, Malappuram.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.


மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 4 | தமிழ்க்கலை | 79 – 100 |
| | வாழ்வியல் | 80 – 86 |
| | கற்கலை | 87 – 94 |
| | நாட்டுப்புறம் | 95 – 100 |
| அலகு 5 | ஏரைத்தேடு | 101 – 122 |
| | கழனி | 102 – 108 |
| | கைவினை | 109 – 115 |
| | தொன்று தொட்டு | 116 – 122 |
| அலகு 6 | மனிதநேயம் | 123 – 141 |
| | விடியல் | 124 – 129 |
| | நல்வழி | 130 – 135 |
| | கடமை | 136 – 141 |
| | **அகரமுதலி** | 142 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 4

# தமிழ்க்கலை



'கலை என்பது உணர்வு மற்றும் கற்பனையின் வெளிப்பாடு'. கலைகள் ஒரு நாட்டின் பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும் அடையாளச் சின்னங்களாகத் திகழ்கின்றன. இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மனிதன் தன் உள்ளத்து உணர்வுகளைக் கண்ணைக் கவரும் பல கலை வடிவங்களாக வடிவமைத்தான். கட்டடக்கலை, சிற்பக்கலை, நாடகக்கலை, ஓவியக்கலை, நிகழ்த்துக்கலை எனக் கலைகள் பல.

# வாழ்வியல்



## தமிழ்க்கலை

இன்பத் தமிழென்றால்
இதயம் விம்முதடா
துன்பந் தருங்கவலை
தொலைந்தே ஒழியுதடா

தோலினது மென்மையிலே
தொளையினது நல்லொழுக்கில்
கோலினது நரம்பினிலே
குதித்துயரும் தமிழிசையே

நடனக் கலையினிலே
நற்றமிழர் நற்பயிற்சி
கடலை விடவிரிவாம்
கணக்கும் மிகநெடிதாம்

சிற்பியின்நல் கைவண்ணம்
செல்லுகின்ற இடமெல்லாம்
அற்புதமாய்க் கண்டிடலாம்
அழகுதமிழ் நாட்டினிலே

நிறங்கலந்த ஓவியங்கள்
நேர்முகமாய்ப் பேசுவதுபோல்
திறமிகுதி தோன்றிடவே
சித்தரிப்பார் செந்தமிழர்

சிலம்பாட்டப் பயிற்சியிலே
திடமெல்லாம் பெற்றிருந்தார்
உலைவில்லா யோகத்தில்
உயிரையே வளர்த்திருந்தார்

வாழ்வைக் கலையாக
வண்டமிழர் கண்டிருந்தார்
தாழ்விலும் கலைப்பெருக்கைத்
தன்னுயிராய்க் காத்துவந்தார்.

– தே.ப. பெருமாள்

## செயல்பாடுகள்

- கவிதையை இனிய இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலில் உனக்குப் பிடித்த பாடல்பகுதிகளையும் அவை பிடித்ததற்கான காரணங்களையும் கூறுங்கள்.
- பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- ஒரு சொல்லை இரு சொல்லாக மாற்றுங்கள்.
    - குதித்துயரும்
    - நற்பயிற்சி
    - சிலம்பாட்டம்
    - செந்தமிழர்
    - நடனக்கலை
- இரு சொல்லை ஒரு சொல்லாக மாற்றுங்கள்.
    - எழில் + ஒழுகும்
    - இடம் + எல்லாம்
    - தமிழ் + கலை
    - நிறம் + கலந்த
- கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கு எதிர்ச்சொற்களைக் கண்டுபிடியுங்கள்.
    - நன்மை
    - தாழ்வு
    - அகம்

- பாடலை முழுமைப்படுத்திக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.

  சிற்பி ஒருவர் இருந்தாரே

  சிறப்பாய்ச் சிற்பம் வடித்தாரே

- இப்பாடலில் கவிஞர் எந்தெந்தக் கலைகளைப் பற்றிச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்? கலந்துரையாடிக் கண்டறியுங்கள்; எழுதுங்கள்.

## கிராமக் காட்சி

சேவல் கூவியதும் எழுகின்ற குடியானவர்கள்; தொழுவத்திற்குச் சென்று அவர்கள் தொழுகின்ற தெய்வங்கள்; கம்பீரமாக நிற்கும் அந்தக் காளைகள்; பருத்திக் கொட்டையை ஆட்டுக் கல்லில் போட்டு ஆட்டும் சத்தம்; தண்ணீரில் அப்பாலைக் கலக்கிவிடக் காளைகள் உறிஞ்சிக் குடிக்கின்ற ஒரு வகை இசை; வெளிறிவிட்ட இருளில் பெண்கள் அங்குமிங்கும் ஓடிப் பறந்து மாட்டுச் சாணத்தைக் கூடைகளில் அள்ளிப்போடுவதால் எழுகின்ற வளையல் ஒலி; எல்லாம் சேர்ந்து கலந்து எழுகின்ற ஒலி, செவிக்கு அமுதம்; சிந்தைக்கு இன்பம்!

பெண்கள் நீரில் நின்று நெற்பயிர் நடும் நேர்த்தி; நாற்று முடிகளை ஆண்கள் வரப்புகளிலிருந்து எறியும் பாங்கு; பெண்கள் இலாவகமாகப் பிடிக்கும் அழகு; கண்களுக்கு விருந்து; கவலைக்கு மருந்து.

செடிகளில் தொங்கும் மிளகாய்ப் பழங்கள்; அவற்றைப் பறித்து மடிகளில் போடும் பெண்கள்; சதிராடும் கன்னியர் போல் கதிராடும் வயல்கள்; அதற்கு எதிராடும் மயில்கள்.





வாலிபக் கல்லைத் தூக்கிப் பார்த்துத் தங்கள் வலிமையைச் சோதிக்கும் காளைகள்.

பச்சைப் பட்டு விரித்தது போன்ற புல்வெளிகள்; தங்களுக்குத் தெரிந்த நாட்டுப் பாடல்களைப் பாடிக்கொண்டு மாட்டுக் கன்றுகளை ஓட்டித் திரியும் உழவர் வீட்டுச் சிறுவர்கள்; மனச்சாட்சிக்குப் பயந்து நடக்கும் மக்கள்; ஊரைச் சுற்றிலும் சின்னஞ்சிறு மஞ்சள் குன்றுகள் போல் காட்சியளிக்கும் வைக்கோற்போர்கள்; சிறிய வைக்கோற் போர்களில் கரணம் அடித்து விளையாடும் பையன்கள்.

மங்கையரின் சிரிப்பொலிபோல் கலகலவென்ற ஓசையுடன் நீரோடும் வாய்க்கால்; அதன் ஓரங்களில் ஆசையுடன் மீன்பிடிக்கும் வலைஞர்; கோவிலில் கோலாகலத் திருவிழா. கும்மியாட்டம், சிலம்பாட்டம், பொய்க்கால் ஆட்டம், பொம்மலாட்டம், கரகாட்டம், பாவைக்கூத்து என்ற எல்லா ஆட்டங்களும் உண்டு.



– கு. இலக்மணப் பெருமாள்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கிராமக் காட்சிகளைக் கலந்துரையாடிக் கூறுங்கள்.
- சரியான பொருளைக் கண்டறிந்து இணையுங்கள்.
  - நேர்த்தியாக – அழகு
  - தொழுகின்ற – மக்கள்
  - பாங்கு – கும்பிடுகின்ற
  - குடியானவர் – ஒழுங்காக
- ஒரு சொல்லை இரு சொல்லாக மாற்றுங்கள்.
  - அங்குமிங்கும்
  - பட்டுப்பூச்சி
  - சிரிப்பொலி
  - நெற்பயிர்
  - நீரோடும்
- இரு சொல்லை ஒரு சொல்லாக மாற்றுவோம்.
  - சிலம்பு + ஆட்டம்
  - ஆட்டு + கல்
  - காட்சி + அளிக்கும்
- பாடப்பகுதியிலுள்ள வருணனைச் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- மாலைநேரக் காட்சியை ஓர் ஓவியமாகச் சித்திரித்து, அதற்கேற்ற வருணனைக் குறிப்பை எழுதுங்கள்.

## கோலம்

இது என்ன கோலம்? என்று ஒருவரைப் பார்த்துக் கேட்கும் போது எதிரே நிற்பவர் ஏதோ வேடிக்கையாகக் காட்சியளிக்கிறார் என்பதனை ஊகிக்கலாம். அவ்விடத்தில் தரையில் அரிசி மாவால் வரையப்படும் கோலம் என்ற பொருள் வராது. அட! தரையில் இடப்படும் கோலம் என்ற சொல்லுக்கு வேறு பல பொருளும் உண்டோ? ஆக, கோலம்





  

என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் உள்ளன என்பது தெளிவாகும்.

கோலம் என்பது தமிழர் வாழ்வில் பண்பாட்டுக் கலையாகவே வளர்ந்து வந்துள்ளது.

கோலம் என்ற சொல்லிற்கு அழகு, அலங்கரிப்பு, ஒப்பனை, சாயல், மாதிரி, அடையாளம் எனப் பலதரப்பட்ட பொருள்களைக் கூறலாம்.

கோலக்கலை சமுதாயத்தின் வாழ்க்கை முறையினையும் எண்ண ஓட்டத்தையும் அவர்தம் கற்பனைத் திறனையும் கைவினையையும் வெளிப்படுத்துவதாக விளங்குகிறது.

கோலம் பற்றி மேலும் சிந்திக்கும் போது ஏற்படும் நினைவுகள் கோலம் போலவே சுழன்று சுழன்று விரிகிறது. நினைவு தெரிந்த காலத்திலிருந்து நம் பகுதிகளில் அரிசிமாவால் மட்டுமே கோலங்கள் இடப்பட்டன. இவை மாக்கோலங்கள் என்று அழைக்கப்பட்டன.

கோலங்களில் நடுவீட்டுக் கோலம், பொங்கல் கோலம், தும்புபிடிக் கோலம், துடுக்குக் கோலம், பாத்திர பண்டங்கள் மீதிடும் கோலம், ரங்கோலி எனப் பலவகைகள் உண்டு.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை அவர் தம் கலை, இலக்கியம், ஓவியம், இசை, பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் முதலியவற்றின் மூலமாக அறியலாம். மக்களின் வாழ்க்கை முறையைப் பண்பாடு என்பார்கள். மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலைகள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் முதலியவைதான் பண்பாடாக அமைகிறது.

பல்லாண்டுகளாக மரபு முறை வழுவாது தம் இல்லச் சடங்குகளில் கோலம் இடுவதை ஒரு முக்கியமான சடங்காகவே மக்கள் கடைபிடித்து வருகின்றனர். இரசனைக்காகவோ, வெறும் பொழுதுபோக்கிற்காகவோ மட்டுமல்லாமல் நம் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாகவும் கோலங்கள் விளங்குகின்றன.

– பேராசிரியர் தே. சொக்கலிங்கம்

## செயல்பாடுகள்

- கீழே கொடுத்திருக்கும் சொற்களுக்கான பொருளை அகரமுதலியைப் பார்த்து எழுதுங்கள்.
  - பழமை
  - ரங்கோலி
  - புகழ்தல்
  - யோசிக்க
- பாடப்பகுதியை வாசித்து, கோலங்களின் வகைகளைப் பட்டியலிடுங்கள்.
- கீழே கொடுத்திருக்கும் அடுக்குத் தொடரைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்குங்கள்.
  - தலைமுறை தலைமுறையாக
  - கட்டம் கட்டமாக
  - சுழன்று சுழன்று
- தமிழ் மன்றம் சார்பாகக் 'கலையும் பண்பாடும்' என்ற தலைப்பில் நடத்தப்படும் கருத்தரங்கத்திற்கான நிகழ்ச்சிகளை உட்படுத்தி ஒரு நிகழ்ச்சி நிரல் தயார் செய்யுங்கள்.
- கோலங்களைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- வகுப்பில் நடைபெறக் கூடிய கோலப் போட்டிக்கான கோலங்களை வரைந்து காட்டுங்கள்.
- கீழேயுள்ள படங்களைப் பாருங்கள். இப்படங்கள் எந்தப் பண்டிகையுடன் தொடர்புடையது எனத் தெரியுமல்லவா? உங்கள் பள்ளியில் ஓணப் பூக்கோலம் அமைத்த அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.



# கற்கலை



## தரணி போற்றும் தஞ்சைப் பெரிய கோவில்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை, பெரியோர்களின் பிறப்பிடம் மட்டுமல்லாது பெரிய கோவிலொன்றின் இருப்பிடமுமாகும். நிலங்களின் அழகினைச் சொன்னால் தஞ்சைக்கு நிகர் தஞ்சையே. தஞ்சை எனும் தஞ்சாவூர் சோழநாட்டின் தலைநகராகவும் விளங்கியது.

சோழப் பேரரசனாய்த் திகழ்ந்த இராஜராஜன், தலைநகர் தஞ்சையில் சிவபெருமானுக்கு ஒரு பெரிய கோவிலை எழுப்பினான். பிற கோவில்களின் கோபுரத்தைவிட இங்குக் கருவறை மீதுள்ள கோபுரம் 216 அடி உயரத்தில் பேரழகுடன் தலை உயர்த்தி நிற்பது கட்டடக் கலைக்குச் சான்றாய்த் திகழ்கின்றது.

கோபுரத்தின் மேலே பல டன்கள் எடையுடன் கூடிய ஒற்றைக்கல் மையத்தில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இக்கல்லானது யானைகளின் உதவியுடன் உருட்டிக் கொண்டு வரப்பட்டது. பன்னிரு மைல் தொலைவில் உள்ள சாரப்பள்ளம் என்ற இடத்திலிருந்து கோபுரத்தின் உயரத்திற்குச் சாய்வான தளம் அமைத்து அதன் மூலம் கோபுரத்தின் மேலே ஏற்றப்பட்டுள்ளது. இது அக்காலச் சிற்பிகளின் அறிவுத் திறமைக்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

கோவிலின் மூல தெய்வமான லிங்க உருவிலுள்ள சிவனும் (பிரகதீஸ்வரர்) அவரெதிரே நந்தியும் பெரிய அளவில் கல்லினால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் கருவறையில் அமைந்துள்ள, ஒரே கல்லினாலான லிங்கத்தைப் போல் வேறெங்கும் காண்பதரிது.

தெய்வத்தின் எதிரேயுள்ள நந்தியின் சிலையானது பெரியதாகவும் நாக்கைச் சுழற்றியபடியிருப்பதும் காண்போரை வியக்கச் செய்யும் கலைப் பெட்டகமாய் விளங்குகிறது.

அக்காலக் கோவில்களில் கோவிலைக் கட்டியதற்குச் சான்றாய்த் திகழ்வது கல்வெட்டுகளே. இக்கோவிலில் கல்வெட்டுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. கோவில் கட்டியதற்கான கல்வெட்டு, கோயிலுக்குத் தானங்கள் வழங்கியதற்கான கல்வெட்டு என ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன.

வருடந்தோறும் இராஜராஜன் பிறந்த நாளான சதய நாளில் உற்சவர் சிலையைக் கோவிலுக்கு வெளியே வீதி உலாவாக எடுத்துச் செல்கின்றனர்.

பகையரசர்கள் படையெடுக்கா வண்ணம் கோவிலைச் சுற்றி அகழி அமைக்கப்பட்டுள்ளது. அகழிகளில் நீர் நிரப்பி முதலைகள் விடப்படுவது அக்கால வழக்கம். அதன்படி இக்கோவில் பாதுகாக்கப்பட்டு அடுத்த சந்ததியினருக்குத் தரப்பட்டுள்ளது.

கோவிலின் கலையழகினைச் சொல்லும் வகையில் வரலாற்றுச் சான்றுகள், வரலாற்றுப் புகைப்படங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலைக்கூடம் கோவிலினுள் உள்ளது.





காலங்களைக் கடந்து, காலங்காலமாய் பல்லோராலும் பாதுகாக்கப்பட்டு, புகழ் பரப்பப்பட்டு இன்றுவரை பேரழகாய்த் திகழும் தஞ்சைப் பெரிய கோவிலை ஒருமுறை பார்க்கச் செல்லுவோமே!

– எம். பத்மநாதன்

## செயல்பாடுகள்

- பாடத்தை வாசித்துத் தஞ்சைப் பெரிய கோவிலின் சிறப்புகளைக் கலந்துரையாடுங்கள். கூறுங்கள்.
- பாடப்பகுதியில் மீண்டும் மீண்டும் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கு அகரமுதலியைப் பார்த்துப் பொருள் கண்டுபிடியுங்கள்.
  - அகழி
  - திறமை
  - பெட்டகம்
  - நிகர்
  - கருவறை
  - வியக்க
- இருசொல்லை ஒரு சொல்லாக மாற்றுங்கள்.
  - சிலை + அழகு
  - அறிவு + திறமை
  - கோவில் + ஒன்று
  - ஒற்றை + கல்
- ஒருசொல்லை இரு சொல்லாக மாற்றுங்கள்.
  - நெற்களஞ்சியம்
  - பேரழகு
  - நிலப்பகுதி
  - கலையழகு
  - காவிரியாறு
- பாடப்பகுதியில் உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு பகுதியைப் பற்றிக் கூறுங்கள். பிடித்ததற்கான காரணத்தை எழுதுங்கள்.

▣ நீங்கள் கண்டு இரசித்த ஏதாவது ஒரு புகழ்பெற்ற கட்டடக்கலையின் சிறப்பு பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.

## தாராசுர அற்புதம்

கும்பகோணம் என்று இப்போது கூறப்படும் திருக்குடந்தைக்கு அருகே உள்ள ஓரிடம் தான் தாராசுரம். அங்கே சிற்பக் கலையின் பெட்டகமாக ஒரு கோவில்!

கோவிலின் முன் மண்டபத்துத் தூண்களிலுள்ள அற்புத சிற்பங்களைப் பார்த்து வியந்த வண்ணம் திருச்சுற்றுக்கு வந்தவுடன் எங்களுக்கு ஏற்பட்ட வியப்பு தாங்க முடியாததாகிவிட்டது. புதையல் கிடைத்தது போல் இருந்தது. பிரமித்துப் போனோம். அங்கேயே அமர்ந்து காலமெல்லாம் அந்த அற்புத சிற்பங்களின் அழகை ரசித்து ஆனந்தித்த வண்ணம் இருந்திருக்க முடியும்.

கதிரவனின் "நான் மறைந்து விடுவேன், உங்கள் போட்டோ படப்பெட்டியில் இவற்றைப் பிடித்துப் போடுங்கள்" என்ற கட்டளையும், சிறிது வயிற்றுக்கும் ஈயப்பட வேண்டிய கட்டாயமும் வந்ததால் மிக விரைவாகச் சுற்று வெளியைச் சுற்றினோம். அமைதியாக ஒவ்வொரு சிற்பமாகப் பார்த்து ரசித்துப் போவதென்றால் பல நாள்களாகலாம்.

இவற்றைத் தவிர நடனத் தோற்றச் சிற்பங்களுடன் போற்றத் தக்க மூன்று சிற்பங்களைப் பற்றியும் கூறவேண்டும். பலவித நடனத் தோற்றத்தில் காணப்படுகிறாள் நடன மங்கை. ஒவ்வொரு பக்கத்தையும் மறைத்துப் பார்க்கும்போது ஒவ்வொரு விதமான தோற்றம் காணப்படும். மற்றொரு சிற்பத்தில் நடனத் தோற்றத்தில் முழு வட்டம் ஒன்றை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

யானையும் காளையும் சேர்ந்த சிற்பத்தில் யானையை மூடிப் பார்த்தால் காளையும் காளையை மூடிப் பார்த்தால் யானையும் காண்பது சிற்பியின் திறமையைக் கூறாது வேறென்ன கூற முடியும்? யானையின் மத்தகமேறி, சிங்கம்







ரத்தம் குடிப்பதை இலக்கியத்தில் கேட்டிருக்கிறோம். சிற்பி கல்லிலே கம்பீரமாக அதை அமைத்துள்ளார்.

மண்டபத்துத் தூண்களிலுள்ள சிற்ப நுணுக்கங்களை எடுத்தெழுத பேனாவுக்குத் திறமையில்லை. கூடுகளில் நடனத் தோற்றத்தையும் விநாயகரின் தோற்றத்தையும் அமைத்திருக்கும் அழகொன்றே தாராசுர அற்புதத்திற்குச் சாட்சி. பருந்துப் பார்வையில் தாராசுரத்தைப் பார்த்துத் திரும்புகிறோம். கோவிலின் பிரமாண்டமான கதவுகள் சாத்திப் பூட்டப்படும் போது மீண்டும் என்று திரும்பி வரப் போகிறோமோ என்ற எண்ணம் எழாமலில்லை.

தாராசுர அற்புதத்தின் பசுமை நினைவுடன் ரயில் நிலையம் வந்து சேர்ந்தோம். நடுநிசியில் கும்பகோணத்தில் இருந்து ரயிலேறி இருக்க இடமின்றி, உறக்கமின்றி தவித்ததும் ஒரு விதத்தில் நல்லதாயிற்று. தாராசுரத்திலுள்ள ஒவ்வொரு சிற்பத்தின் அழகும் கம்பீரமும் பற்றி மீண்டும் இரவெல்லாம் விழித்திருந்து எண்ணி எண்ணி சென்னை வரும் வரை மகிழ்ந்தோம்.

– விக்ரமன்

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்து அவற்றில் உள்ள சிற்பங்களின் அழகைப் பற்றிக் கலந்துரையாடுங்கள். கூறுங்கள்.
- அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - நிசி
  - இல்லம்
  - அவா
  - ஆனந்தம்
  - மத்தகம்
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - பிரமித்துப் போய்
  - ஆனந்தம்
  - பெருமூச்சு
- பாடப்பகுதியை வாசித்து வினாநிரல் தயார் செய்யுங்கள்.
- பயணம் செய்த அனுபவம் உங்களுக்கு இருக்குமல்லவா? உங்கள் பயண அனுபவங்களை எழுதுங்கள்.

## அறிவால் வென்றவர்

தெனாலிராமனுக்குத் திடீரென்று காய்ச்சல் ஏற்பட்டது.

அவருக்கு வைத்தியம் பார்க்க வைத்தியர் 'கோபுசி ' என்பவர் வந்தார். கைராசி வைத்தியர் என்றாலும் 'பொருளாசை' மிகக் கொண்டவர். ஏழையாக இருந்தாலும் சரி, பணக்காரர்களாக இருந்தாலும் சரி, அதிக தொகை பெறுவதில் தான் குறியாக இருப்பார்.

அறுபது வயதுக்கு மேலாகியும் பணத்தாசை மட்டும் அவரை விட்டுப் போகவில்லை.

தெனாலிராமன் அரச சபையில் விகடகவியாக இருப்பதால் அவனுக்கு ஏகப்பட்ட சன்மானம் கிடைக்கும். எனவே அவனிடம் ஏகப்பட்டதைக் கறக்கலாம் என்ற எண்ணத்தில் இருந்தார் வைத்தியர்.

அவன் வீடு வந்து வைத்தியம் பார்த்தார் கோபுசி.

திடீரென்று காய்ச்சல் குறைந்து மறுபடியும் ஏறியது.

நாளாவட்டத்தில் காய்ச்சல் குறைந்தது.

வைத்தியர் பணம் கேட்டார்.

எவ்வளவு பணம்? என்று தெனாலிராமன் கேட்டார்.

இருநூறு பணம் என்றார் வைத்தியர். விரல்களை விரித்துக் காட்டி வெறும் காய்ச்சலுக்கு இவ்வளவு பணமா?

உங்களுக்கு வந்தது வெறும் காய்ச்சல் அல்ல, கடுங்காய்ச்சல்... இதைத் தீர்க்க நான் படாதபாடு பட்டுவிட்டேன். உங்களுக்கான மருந்து தயார் செய்ய பெரும் பணம் செலவழித்துள்ளேன். தங்களுக்குப் பணம் சாதாரணமானதுதானே என்று வைத்தியர் சொன்னார்.



வைத்தியர் பெரும் பேராசைக்காரர் என்பதை உணர்ந்த தெனாலிராமன் இவருக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

வைத்தியரே உங்களுக்குக் கொடுக்கத்தக்க அளவு பணம் என்னிடமில்லை. அரண்மனைக்குச் சென்று பணம் வாங்கலாம் என்றால் அரசரும் ஊரில் இல்லை. அதனால் ....... வைத்தியர் தவித்தார்.

எங்கள் புழக்கடையில் அரேபியக் குதிரை ஒன்றிருக்கிறது. சந்தையில் விற்றால் முந்நூறு பணம் கிடைக்கும். அதை விற்று உங்களுக்குத் தருகிறேன்.

நாளை மறுநாள் சந்தை கூடுகிறது. அப்போது விற்று, பணத்தை அப்படியே தந்து விடுகிறேன் என்றார் தெனாலிராமன்.

ஆகா! முந்நூறு பணம் வரப்போகிறதா? சரி சரி ஒரு நாள் காத்திருப்பதில் என்ன குறை வந்து விடப் போகிறது. நான் கேட்டதோ இருநூறு பணம். தெனாலிராமன் கொடுக்கப் போவதோ முந்நூறு பணம்... ஆகா... பெரும் பணம் கிடைக்கப் போகிறது என்ற பேராசையுடன் வைத்தியர் சென்றார்.

ஒரு நாள் கழிந்தது. வைத்தியர் கோபுசி பண ஆசையுடன் தெனாலிராமன் வீட்டிற்கு வந்தார். இருவரும் சந்தைக்குக் கிளம்பினர்.

தெனாலிராமன் குதிரையையும் பூனையையும் கூட்டிக்கொண்டு வந்தார். இருவரும் சந்தையை வந்து அடைந்தனர்.

மகா ஜனங்களே! என்று தெனாலிராமன் குரல் கொடுத்தான். மக்கள் அனைவரும் சூழ்ந்தனர்.

மக்களைப் பார்த்த அவர், "மக்களே... நீங்கள் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்" என்றார்.



"என்னய்யா புதிர் போடுறீர்" என ஒருவன் தெனாலிராமனைப் பார்த்துக் கேட்டான்.

இந்த மாபெரும் அரேபியக் குதிரையின் விலை மிக மிக மலிவு. இதோ இந்தப் பூனை மிக அற்புதமானது. இதை வீட்டில் வைத்திருந்தால் அனைத்து நன்மைகளும் கிடைக்கும். பூனை விலை முந்நூறு பணம். குதிரை விலை ஒரு பணம் என்றார் தெனாலிராமன்.

என்னது? பூனை முந்நூறு பணமா? குதிரை ஒரு பணமா? கேட்டவர்கள் வியந்து போனார்கள்.

"என்னய்யா விளையாடுகிறீர்களா?" ஒரு பெரியவர் கேட்டார்.

"மகா ஜனங்களே! பூனையை வாங்கினால் தான் குதிரை கிடைக்கும்" என்றான் தெனாலிராமன்.

ஒருவர் முந்நூற்றியொன்று பணத்தைக் கொடுத்து விட்டு குதிரையையும் பூனையையும் வாங்கிக் கொண்டு சென்றார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட தெனாலிராமன், வைத்தியர் ஐயா! இதோ உங்கள் பணமென்று ஒரு பணத்தை அவரிடம் கொடுத்தார்.

அதிர்ந்த வைத்தியர், என்னய்யா நீர் ஒரு பணத்தைத் தருகிறீர்? என்னை என்ன கிண்டலா செய்கிறீர்? சற்றுக் கோபத்தோடு கேட்டார்.

"கிண்டலும் இல்லை... வண்டலும் இல்லை... என் வைத்தியச் செலவுக்குக் குதிரை விலையைத் தருவதாகச் சொன்னதுதானே நமக்குள்ள பேச்சு. குதிரை விலை ஒரு பணம் தானே... அதைத்தானே கொடுத்தேன். மேலும் ஏதாவது பேச வேண்டுமானால் வழக்குத் தொடருவோம், வாருங்கள் என்றார் தெனாலிராமன்.

"எனது பணப் பேராசைக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். வழக்கு என்று போனால் இந்த ஒரு பணமும் மிஞ்சாது" என்று நினைத்து தலையில் அடித்துக் கொண்டு சென்றார் வைத்தியர்.

## செயல்பாடுகள்

- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுங்கள்.

  வேணும், மாபெரும், காலங்கள், செலவழித்து, பேராசைக்காரன், திடீரென, வைத்தியர், கிண்டல், கேட்டவர்கள், புழக்கடையில்

- இக்கதையை உரையாடல் வடிவில் எழுதி நடியுங்கள்.
- பள்ளி நூலகத்திலிருந்து இது போன்ற நகைச்சுவை கதைகளைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குங்கள். பள்ளி வாசிப்பு மூலையில் வைத்துப் பயன்படுத்துங்கள்.

# நாட்டுப்புறம்



## பொய்க்கால் குதிரை

வண்ண வண்ண உடைஉடுத்தி
எண்ணமெல்லாம் மகிழ்வாக்கி
மக்களெல்லாம் மனம் குளிர
திக்கெல்லாம் இசை முழக்கம்!

மாமரத்துக் கட்டைக் கட்டி
பூமரத்து வீதிகளில்
இராஜாவும் இராணியுமாய்
கூத்துக்கட்டி ஆடுவரே!

பம்பை நாதஸ்வரம் – தவில்
நையாண்டி மேள தாளம்
எவ்விசைக்கும் அடவு கட்ட
துன்பமெலாம் பறந்து போகும்!

திருவையாறு இராமகிருட்டிணன்
அருமையாக வடிவமைத்த
பெருமை தரும் ஆட்டமிந்த
பொய்க்கால் குதிரை ஆட்டமாம்!

பட்டித்தொட்டி மக்களெல்லாம்
சொந்தம் சேர்ந்து மகிழ்ச்சியுற
வடக்கு தெற்கு எங்கும் நடக்கும்
பாமரர் கலை ஆட்டமாம்!

பொய்க்கால் குதிரை ஆட்டமதை
மெய்யாக நினைத்திடுவோம்
நலிந்திடாமல் போற்றிடுவோம் – கலை
அழிந்திடாமல் காத்திடுவோம்!!

– மலைவேந்தினி

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்து இராகத்துடன் பாடுங்கள்.
- பாடலில் உள்ள இரண்டாம் எழுத்து (எதுகை) ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- நாட்டுப்புறக் கலைகளைப் பற்றிய படங்களைச் சேகரித்து மலர் தயாரியுங்கள்.

## தஞ்சாவூர் பொம்மை

தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள் களிமண்ணால் செய்யப்படுகின்றன. இப்பொம்மைகளின் தலையின் உள்ளே சிறு கம்பி பொருத்தப்பட்டிருக்கும். பொம்மையின் உடல் இருக்கும் இடத்தில் கம்பியின்மேல் செங்குத்தாக நிலைநிறுத்தினால், தலை ஆடிய வண்ணம் இருக்கும். இதனால் இக்காரணப் பெயர் பெற்றது. காற்றிலும்கூட இதன் தலை மட்டும் ஆடிய வண்ணம் இருக்கும்.

சாய்ந்தாடும் பொம்மை: இப்பொம்மைகளின் தலைப்பாகம் கூம்பு வடிவிலும் அடிப்பாகம் அரைக்கோள வடிவிலும் இருக்கும். இதனுள் அதிக எடையுள்ள சிறிய இரும்பு





கோலிக்குண்டு அல்லது எடைகூடிய மண் நிரப்பப்பட்டிருக்கும். கூம்பு வடிவ தலைப்பாகத்தைத் தள்ளிவிடும்போது, கோளவடிவ அடிப்பாகம் புவியீர்ப்பு விசையின் காரணமாக நேர் செங்குத்தாகவே வந்து நிலை நிறுத்திக்கொள்ளும். எத்தனை முறை தள்ளிவிட்டாலும் பழைய நிலைக்கு வந்துவிடும். ஊர்ப்பெயரைத் தாங்கிய இப்பொம்மைகளை அழைக்க அரசு புவியியல் அடையாள சட்டப்படி ஜியோகிராபிக்கல் இண்டிகேஷன் (geographical indication) ஒப்புக்கொண்டுள்ளது.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துத் தஞ்சாவூர் பொம்மைகளின் சிறப்புகளைக் கலந்துரையாடுங்கள். கூறுங்கள்.
- பாடப்பகுதியிலுள்ள கருத்துகளின் அடிப்படையில் தலையாட்டிப் பொம்மையைக் குறித்துக் கவிதை எழுதுங்கள்.
- கேரளத்தின் சிறப்புமிக்க ஆறன்முளா கண்ணாடி குறித்துச் சிறுகுறிப்பு எழுதுங்கள்.

## கூத்து

தொன்றுதொட்டு நாட்டுப்புறங்களில் வாழையடி வாழையாக வளர்ந்து வரும் நாட்டுப்புறக் கலைகள் பலவாகும். அவற்றுள் தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கும்மி, ஒயில், கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, பாவைக்கூத்து, தோல் பாவைக்கூத்து, பொம்மலாட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.





அதேபோல் குரவை, துணங்கை, வெறியாட்டு, கொடுகொட்டி, பாண்டுரங்கம், கபாலம், வள்ளிக்கூத்து, பாவைக்கூத்து. ஆரியக் கூத்து, உரற்கூத்து, போன்றவை பொழுதுபோக்கு கூத்துகளாகும். கூத்துகளை மனிதர் கூத்து, பொம்மைக்கூத்து என இரண்டாகப் பிரித்துக் கூறுவர்.

தெருக்கூத்து, கணியான் கூத்து, டப்பாங்கூத்து போன்றவைகளை மனிதகூத்துகள் என்றும் தோல்பாவை, பொம்மலாட்டம் போன்றவற்றைப் பொம்மைக் கூத்துகள் என்றும் அழைத்தனர். மேலும் கட்டை கட்டியாடும் கூத்து என்று இன்றும்கூட கட்டைகளால் ஆன அணிகலன்களுடன் ஆடியும் பாடியும் நடத்தப்படும் கிராமிய நாடகமும் தெருக்கூத்து வகைதான். தெருக்கூத்து தமிழகத்தின் வட மாவட்டங்களில் விமர்சையாக நடத்தப்பட்டு வருகிறது. கிராமப்புறக் கோவில்களில் பங்குனியில் தொடங்கி ஆடி மாதம் வரையிலும் தெருக்கூத்துகள் நடைபெறுவது நடைமுறையில் இருந்தது. திரௌபதியம்மன் கோவில் திருவிழாவில் இன்னமும் சில கிராமப்புறங்களில் பாரதக் கூத்து நடைபெறுகிறது.

அக்காலத்தில் கோவிலின் அருகில் மேடான பகுதியில் கம்பங்களை நட்டு அதில் விளக்குகளைக் கட்டி களரியை உருவாக்குவார்கள். ஒரு மரப்பெஞ்சின் மீது இசைக்கலைஞர்கள் அமர்ந்திருப்பார்கள். தெருக்கூத்தில் ஆர்மோனியம், தாளம், மத்தளம், ஜால்ரா போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

களரியின் மூன்று பக்கங்களிலும் பார்வையாளர்கள் அமர்ந்திருப்பார்கள். களரியைக் கட்டி பின்னர் கட்டியங்காரன் அறிமுகமாகி, கதாபாத்திரங்களை அறிமுகம் செய்வதற்கு இரவு பத்து மணியாகும். விடிய விடிய கூத்து நடைபெறும். அன்று இந்தத் தெருக்கூத்தைப் பார்த்து ரசிக்க மக்கள் விழித்திருப்பார்கள்.



சங்கரதாச சுவாமிகள் தெருக்கூத்துகளை மேடையேற்றி சிறப்படையச் செய்தார். திரைச்சீலை, மின்விளக்குகளின் சோடனைகள் போன்ற புதிய வழி முறைகளை அறிமுகப்படுத்தியவரும் இவரே.

குறிப்பிட்ட காலங்கள் வரை இவரின் நாடகங்களைத் தெருக்கூத்தாகவே நிகழ்த்தி வந்தனர். இதன் காரணமாக டி.ஆர் மகாலிங்கம், ஆர். வி. உடையப்பா ஆகியோர் நாடகங்களையும் தெருக்கூத்து என்றே அழைத்து வந்தனர்.

எம். கே. தியாகராச பாகவதர், கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள் போன்றவர்கள் தெருக்கூத்துக் கலைஞர்களாகவே அறிமுகம் ஆனவர்கள். கூத்தைக் கூத்து, நாடகம், ஆட்டம் என்ற பல பெயர்களில் அழைத்தாலும் கிராமப்புற மக்களால் இன்றும் கூட தெருக்கூத்து என்றே அழைக்கப்படுகிறது. தெருக்கூத்தின் இன்றியமையாத பாத்திரமான கட்டியங்காரனைப் பபூன் பிருது, காமியன், விதுடன், சூத்திரதாரி எனப் பெயரிட்டு அழைத்தனர். மேலும் தெருக்கூத்து முறையில் தெற்கத்திப் பாணி, வடக்கத்திப் பாணி என இருவகைகள் பின்பற்றி வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஒப்பனை, இசை, ஆடல், பாடல், நடிப்பு என்ற பல்வகை கூறுகளில் உள்ள வேறுபாடுகளே இதற்குக் காரணமென்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

– எஸ். பாலபாரதி




## செயல்பாடுகள்

- பாடத்தை வாசித்துக் கூத்துகளின் சிறப்புகளைக் கலந்துரையாடுங்கள். கூறுங்கள்.
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - விமர்சை
  - சோடனை
  - களரி
- ஒரு சொல்லை இரு சொல்லாக மாற்றுங்கள்.
  - தெருக்கூத்து
  - இசைக்கருவி
  - அமர்ந்திருப்பார்கள்
  - பழங்காலம்
  - அணிகலன்
- உங்கள் பள்ளி விழாவிற்கு வருகை தரும் கூத்துக் கலைஞரை நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்க உங்களால் என்ன செய்ய இயலும்? கலந்துரையாடி உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.

## இலக்கணம்

### இயைபு

பாடலில் அடிகள்தோறும் இறுதியில் வரும் எழுத்தோ, சொல்லோ ஒன்றுபோல் வருவது இயைபு எனப்படும்.

எ.கா

சீரிய நெற்றி எங்கே?

சிவந்த நல்லிதழ்கள் எங்கே?

- கீழ்க்காணும் கவிதையிலுள்ள இயைபுச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

"கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம் விளையாடும்"

- இந்த அலகில் வந்துள்ள பாடல்களைப் படியுங்கள். அவற்றில் காணப்படும் இயைபுச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

### முரண் (மாறுபடுதல்)

பாடலில் சீர்கள் சொல்லாலும் பொருளாலும் எதிர்மறையாக வருதல் முரண் ஆகும்.

எ.கா

காலையும் நீயே மாலையும் நீயே

- பின்வரும் அடிகளில் உள்ள முரண் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

1. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
2. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
3. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
4. காலையும் மாலையும் இரவும் பகலுமென
5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
   துன்பம் துடைத்தூன்றும் தூண்.
6. செயற்கை அறிந்த கடைத்தும் உலகத்து
   இயற்கை அறிந்து செயல்.

## அலகு 5

# ஏரைத்தேடு



ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் நடைமுறையில் உள்ள தொழில்களை அடிப்படையாகக் கொண்டே இயங்குகிறது. தொழில்களில் முதன்மையானது உழவுத்தொழில். பிற தொழில்கள் நாட்டின் பொருளாதார வளத்தைச் சீரமைக்கின்றன. சாதாரண மனிதருக்கும் செய்ய முடிந்த தொழில்களே குடிசைத் தொழில்கள்.

# கழனி



## வாழ்வைக் காப்பவன்

காலைப் பொழுதில் ஏர் தூக்கி
கழனிக்குப் போகும் உழவன் பார் !
கடின உழைப்பால் வேர்வை சிந்தி
களைப்பை உணரா உழவன் பார் !

நாளைப் பொழுதும் நமது என்று
நம்பிக்கை விதைக்கும் உழவன் பார் !
நல்லது கெட்டதும் நிலத்தில் காணும்
நல் உழைப்பாளி உழவன் பார் !

பாலை நிலத்தையும் பக்குவமாக்கி
பாங்குடன் பயிர் செய்யும் உழவன் பார் !
பயன்கள் கிடைத்தால் பகிர்ந்தே வழங்கும்
பரோப காரியாம் உழவன் பார் !

ஏழை என்பதால் கவலைப்படாமல்
என்றும் உழைத்தே உண்பார் பார் !
ஏற்றத் தாழ்வும் பேதங்கள் இன்றி
உழைப்பே மந்திரம் என்பார் பார் !

வாழைபோலத் தானியம் ஈந்து
உலகைக் காக்கும் உயர்ந்தோர் பார் !
வாழ்க்கை முழுதும் மாடாய் உழைத்து
வாழ்வைக் காக்கும் உழவன் பார் !

– வெ. தமிழழகன்

## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - கழனி
    - பரோபகாரி
    - களைப்பு
    - ஈந்து
    - பாங்கு
- பாடலில் ல, ழ எழுத்துகள் இடம்பெற்றுள்ள சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- பாடலின் கருத்தைக் கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- எதிர்ச்சொற்களை எழுதுங்கள்.
    - காலை
    - நல்லது
    - ஏழை
- கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களைக் கொண்டு வாக்கியங்கள் அமையுங்கள்.

    வேர்வை சிந்தி
    பகிர்ந்து வழங்கும்
    மாடாய் உழைத்து
- பாடலில் உங்களுக்குப் பிடித்தமான அடிகளைக் கூறி அதற்கான காரணத்தையும் எழுதுங்கள்.
- கவிதையைப் பாடி மகிழ்ந்தீர்கள் அல்லவா? கவிதைக்குப் பொருத்தமான இரசனைக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- உழவுத்தொழிலோடு தொடர்புடைய கவிதைகளைச் சேகரியுங்கள். தொகுப்பு உருவாக்கி வெளியிடுங்கள்.

## உழவுத்தொழில்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் உழவுத் தொழிலின் சிறப்பைக் கூறியுள்ளார். நமது நாட்டின் முக்கியத் தொழிலும் உழவுத் தொழில்தான். இந்த உழவுத் தொழிலை நம்பித்தான் நமது நாட்டில் பெரும்பாலான மக்கள் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மனிதன் உயிர் வாழ முக்கியமானது உணவு ஆகும். இந்த உணவுப் பொருளை உற்பத்தி செய்ய உறுதுணையாக இருப்பது உழவுத் தொழிலாகும். நமது நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்வதும் இந்த உழவுத் தொழிலே ஆகும். "இந்தியா ஒரு விவசாய நாடு" என்று அழைக்கப்படுகிறது. நம் நாட்டில் கிராமத்தில் உள்ள மக்களின் முக்கியத் தொழிலாக உழவுத்தொழில் விளங்குகிறது. இந்த உழவுத் தொழில் சிறப்புற நடந்தால் தான், நம் நாட்டின் உணவுப் பஞ்சம் தீரும். உழவுத் தொழிலை மையமாக வைத்துத்தான் நமது நாட்டில் பசுமைப் புரட்சி திட்டம் வகுக்கப்பட்டது.

இன்று அரசாங்கம் உழவர்களுக்குப் பல சலுகைகளை அளித்து, உழவுத் தொழில் சிறப்புற வழி வகுத்துள்ளது. குறிப்பாக, கூட்டுறவு வங்கிகள் மூலம் உழவர்களுக்கு, உழவுத் தொழிலுக்குப் பணம் அளிப்பதோடு, உரம், பூச்சி மருந்து எனப் பல வகையிலும் உதவி புரிகிறார்கள். உழவுத் தொழிலுக்கு அரசாங்கம் அளித்த ஆதரவும் பசுமைப் புரட்சியுமே இன்று நம் நாட்டில் உணவுப் பஞ்சம் இன்றி, உணவில் தன்னிறைவு ஏற்பட்டுள்ளதற்குக் காரணங்களாக அமைகின்றன.

உழவுத் தொழில் நம்நாட்டில் சிறப்பாக இருப்பதால் நாட்டில் உணவுப் பஞ்சம் இல்லாமல் உள்ளது. கிராம மக்கள் நகரில் குடியேறாமல் தடுப்பதே இந்த உழவுத்தொழில் ஆகும். நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பதில் உழவுத்தொழிலும் ஒன்று என்பது மிகையல்ல. இதைக் கருதிதான் தமிழர்கள் உழவுத் தொழிலுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொங்கல் பண்டிகையை ஏற்படுத்தினார்கள்.





உயர் தொழிலாம் உழவுத் தொழிலைப் போற்றுவோம். நமக்கு உணவு அளிக்கும் அந்தப் புனித பூமியையும் உழவர்களையும் போற்றி வணங்குவோம்.

– செந்தமிழ் செழியன்

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.
- உழவுத் தொழிலோடு தொடர்புடைய கருவிகளின் பெயர்களை எழுதுங்கள்.
- அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - பஞ்சம்
    - ஆதரவு
- தொடர்களைப் பிரித்து எழுதுங்கள்
    - பசுமைப் புரட்சி
    - முதுகெலும்பு
    - குடியேறாமல்
- கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
    - சலுகை
    - ஆதரவு
    - பெரும்பாலான
    - உறுதுணை
- உழவுத் தொழிலோடு தொடர்புடைய விழாக்களைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- இயற்கை உரங்களைப் பயன்படுத்த வலியுறுத்தி, பள்ளிக் காலைக் கூட்டத்தில் வாசிப்பதற்காக உறுதிமொழி தயார் செய்யுங்கள்.

- இரசாயன உரங்களால் ஏற்படும் தீமைகளைக் குறித்துக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- நமக்கு உணவளிக்கும் உழவனை வாழ்த்தி ஒரு வாழ்த்து அட்டை தயாரியுங்கள்.

## பழமொழியும் உழவுத் தொழிலும்

பண்டைக் காலம் முதலே நமது முன்னோர்கள் வேளாண்மை செய்வதில் சிறந்து விளங்கினார்கள். தமக்கு வேண்டிய உணவை அவர்களே உற்பத்தி செய்தனர். உழவுத்தொழில் அவர்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருந்தது. அவர்களின் பேச்சுவழக்கிலும் வேளாண்மை பற்றிய பழமொழிகள் இருந்தன.

1. வெண்ணெய் போல் உழுதால் குன்று போல் விளையும்

   நிலத்தை உழவுத் தொழில் செய்வதற்கு ஏற்ற நிலமாக முதலில் மாற்ற வேண்டும். அதற்கு வெண்ணெயைப் போல மண்ணைச் சிறு சிறு அளவில் மாறுவது வரை நிலத்தை நன்கு உழ வேண்டும். அப்பொழுது தான் பயிர் நன்கு விளைந்து குன்றளவு நெல் குவியலைத் தரும் என்பது இதன் கருத்தாகும்.

2. ஆழ உழுதல் ஆட்டு உரத்துக்கும் அதிகம்

   நிலத்தை ஆழமாக உழவேண்டும். ஆழமாக உழுவதால்



மேல் மண்ணும் கீழ் மண்ணும் நன்கு கலந்து விடுகிறது. இப்படிக் கலப்பதால் அம்மண் உயிர்ச்சத்து மிக்க மண்ணாக மாறும். ஆட்டு உரத்தை இட்ட மண்ணைக் காட்டிலும் உழவுத் தொழிலுக்கு ஏற்ற சத்துமிக்க மண்ணாக அது மாறுகிறது என்பது இதன் பொருளாகும்.

3. காய்ந்த வித்துக்குப் பழுதில்லை

பயிர் நல்ல விளைச்சலைத் தரவேண்டுமானால் விதைகள் நல்லதாக இருக்க வேண்டும். நன்கு காய்ந்த விதைகளை விதைத்தால் அது வீணாகப் போவதில்லை. முளைவிட்டு நன்கு வளர்கிறது. நல்ல விளைச்சலையும் தருகிறது என்பது இதன் கருத்தாகும்.

4. எரு இல்லா வயல் கன்றில்லா மாட்டைப்போல

நிலத்தை நன்கு உழுது தண்ணீர் பாய்ச்சினாலும் போதாது. இயற்கையில் கிடைக்கும் உரங்களை இடுதல் தேவை. தழை, சாணம், எலும்பு போன்ற இயற்கை உரங்களைப் போட்டால் பயிர் நன்கு விளையும்.

மேற்கூறிய பழமொழிகள் முன்னோர்களின் விவசாயத் திறனைக் காட்டுகிறது. மிகவும் நுட்பத்துடன் அவர்கள் விவசாயம் செய்தார்கள் என்று அறிய முடிகிறது. அவர்களின் வழியில் நாமும் வேளாண்மையை உயிர் போலக் கருதி வேளாண் விளைச்சலை ஊக்கப்படுத்த வேண்டும்.

முனைவர் சு. லதா



## செயல்பாடுகள்

- பழமொழிகளையும் அதன் விளக்கங்களையும் வாசியுங்கள். கலந்துரையாடுங்கள்.
- பள்ளித்தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை விற்பனை செய்வதற்கான விளம்பரம் தயார் செய்யுங்கள்.
- எதிர்ச்சொற்களை எழுதுங்கள்.
    - இயற்கை
    - ஆழம்
    - நல்லது
- கீழ்க்காணும் தொடர்களை இரு சொற்களாக மாற்றுங்கள்.
    - குன்றளவு
    - பழுதில்லை
    - போவதில்லை
    - கன்றில்லா
- கீழே தரப்பட்டுள்ள தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமையுங்கள்.
    - வீணாகப் போவதில்லை
    - நன்கு வளர்கிறது
    - விளைச்சல் தரும்
- கீழே தரப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் பழங்கால விவசாயத் தொழில்களுக்கும், நவீன விவசாயத் தொழில்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறித்துத் தகவல்களைத் திரட்டிக் குறிப்பு எழுதுங்கள்.
    - நிலத்தைப் பண்படுத்தல்
    - விதைவிதைத்தல்
    - நாற்று நடுதல்
    - களை பறித்தல்
    - உரமிடுதல்
    - மருந்து தெளித்தல்
    - அறுவடை
- வீட்டுத்தோட்டம் /மாடித்தோட்டம் அமைப்பதன் நன்மைகளைக் குறித்துக் கலந்துரையாடி குறிப்பெழுதுங்கள்.
- சிறந்த விவசாயிக்கான விருது பெற்ற விவசாயியைப் பாராட்டி பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.
- உழவுத் தொழிலோடு தொடர்புடைய பழமொழிகளைச் சேகரியுங்கள். தொகுப்பு உருவாக்குங்கள்.

# கைவினை



## நெசவாளர்

ஏழைத் தோழர் நெசவாளர்
ஏற்றம் காணத் துணைசெய்வோம்
வாழத் துடிக்கும் தொழிலாளர்
வறுமை நீங்க வழிசெய்வோம்
தாழ்ந்து கிடக்கும் புழுகூடத்
தலையை நிமிர்த்தத் துடிதுடிக்கும்
வீழ்ந்து நலிய விடலாமோ
விரைவாய் வாரீர் துணைபுரிவோம்
உழைத்து நிற்கும் கைத்தறியை
உறுதி மிக்க ஆடைகளை
இழைத்து நெய்து தருகின்றார்
இன்பம் வழங்கி வருகின்றார்
அழைத்து வாங்க வேண்டாமோ
தழைத்து வளர இத்தொழிலைத்
தரணி யெங்கும் ஆதரிப்பீர்
நின்று நிலைத்துத் தொண்டாற்றும்
நீண்ட பழைமைத் தொழிலிதுவாம்
அன்று வாழ்ந்த முன்னோர்கள்
அணைத்து வளர்த்த கலையாகும்.



– பாவலர் கருமலை தமிழாழன்

### ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | பாவலர் கருமலைத் தமிழாழன் |
| இயற்பெயர் | : | கி. நரேந்திரன் |
| பிறப்பு | : | 1951–ஆம் ஆண்டு ஜூலை 16–ஆம் தேதி |
| ஊர் | : | கிருஷ்ணகிரி கருமலை |
| தந்தை | : | மு. கிருட்டிணன் |
| தாய் | : | இராசம்மாள் |
| முக்கியப் படைப்புகள் | : | வேரின் விழுதுகள், மரபின் வேர்கள், நீர்க்கால்கள், மண்ணும் மரபும் , வீணை மத்தளமாகிறது, ஒப்பனைப் பூக்கள் |
| விருது | : | தமிழ் இலக்கிய மாமணி விருது, தமிழ்ச்செம்மல் விருது, தேன்மழைக் கவிஞர் விருது. |

## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- கவிதையின் கருத்துகளை உட்கொண்டு கலந்துரையாடுங்கள்/ எழுதுங்கள்.
- அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - ஏற்றம்
  - தரணி
  - வறுமை
  - தழைத்து
  - நலிய
- சொற்களை முறைப்படுத்தி வாக்கியத்தை முழுமையாக்குங்கள்.

  உறுதிமிக்க/ இழைத்து / நெய்து / ஆடைகளை / தருகிறார்கள் / நெசவாளர்கள் / தரணியெங்கும் / வளரவேண்டும்/ நெசவுத் தொழில் / தழைத்து
- நெசவுத் தொழிலாளர்களிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

## நேர்காணல்

இராயபுரம் பள்ளி மாணவ, மாணவிகள் சணலால் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தனலெட்சுமி அவர்களைச் சந்தித்து நடத்திய நேர்காணல்.

குமரன் : வணக்கம் அக்கா! நாங்கள் இராயபுரம் கிராமத்தின் அரசு நடுநிலைப்பள்ளி மாணவர்கள். தொழில் துறையில் சாதித்த உங்களிடம் ஒரு நேர்காணல் நடத்த வந்திருக்கிறோம்.

தனலட்சுமி : வணக்கம். உங்கள் அனைவரையும் இனிதே வரவேற்கிறேன்.

குமரன் : அக்கா முதலில் உங்களைப் பற்றியும் நீங்கள் இந்தத் துறைக்கு வந்ததைப் பற்றியும் கூறுங்களேன்.

தனலட்சுமி : நான் பிறந்து வளர்ந்தது திருச்சியில். என் அம்மாவிடம் சமையல், தையல், எம்ப்ராய்டரி போன்றவற்றைக் கற்றுக் கொண்டேன். அப்பாவின் கடைக்கும் சென்று வந்ததால் எனக்குத் தொழில் சார்ந்த ஆர்வமும் இருந்தது. 1997–ஆம் ஆண்டு வியாசர்பாடியில் தம்பியுடன் பரிசுப்பொருள் கடை ஒன்றைத் தொடங்கினேன். ஏழு ஆண்டுகள் சிறப்பாகக் கடை நடத்தினேன். தம்பியின் வேலை இடமாறுதலும் சில சூழ்நிலைகள் காரணமாகவும் கடையை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இனியா : பிறகு எப்படி இந்தச் சணல் தொழிலில் ஈடுபாடு வந்தது?

தனலட்சுமி : தொழில் பயிற்சிக்குச் சென்று சுற்றுச்சூழலுக்கு மாசு தராத சணல் தொழில் பற்றிக் கற்றுக் கொண்டேன்.

இனியா : முதன்முதலில் எப்படி தொழில் தொடங்கினீர்கள்?



அரசின் மகளிர் திட்ட அமைப்பினர் உதவியுடன் தொழில் தொடங்கினேன். தனி ஆளாக வீட்டிலிருந்தே தனலட்சுமி ஐவர்ஸ் பேக் என்ற பெயரில் சணல் பைகளை மட்டும் வைத்து விற்கத் தொடங்கினேன். வெறும் பைகளுக்கு மட்டும் சந்தையில் வாய்ப்புக் குறைவு என்பதால் தலையில் வைக்கும் ஹேர் கிளிப், எக்ஸிகியூட்டிவ் பேக், ஸ்கூல் பேக், ஆபீஸ் பேக், டிராவல் பேக், ஃ பிரிட்ஜ் கவர், கைவினைப் பொருட்கள் போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட சணல் பொருட்களைத் தயாரிக்கத் தொடங்கினேன்.

ஜூலி : இதற்குத் தேவையான முக்கிய கச்சாப் பொருட்களை எங்கிருந்து வாங்குகிறீர்கள்?

தனலட்சுமி : இத்தொழிலில் இருக்கும் அனைவருமே மேற்கு வங்கத்திலிருந்துதான் கொள்முதல் செய்கிறார்கள்.

நசீமா : சணல் தைப்பதற்கான இயந்திரங்களும் முதலீடும் நிறைய தேவைப்படுமே?

தனலட்சுமி : இயந்திரங்கள் பன்னிரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் முதல் முப்பதாயிரம் ரூபாய் வரைதான் விலை. பத்தாயிரம் ரூபாய் முதலீடே போதுமானது. மட்டுமல்லாமல் அரசு இலவசப் பயிற்சி அளித்து, அரசு அமைப்புகள் மூலம் வங்கிக் கடனுதவிக்கும் வழிகாட்டுகிறது.





| | |
|---|---|
| கண்ணன் : | இதை விற்பனை செய்வதற்கு ஏற்ற இடங்களைப் பற்றிக் கூறுங்களேன். |
| தனலட்சுமி : | பேன்சி கடை, பேக் கடை, கைவினைப் பொருட்கள் விற்பனையகம், கண்காட்சிகள், ஊர்ச்சந்தைகள், கோவில் திருவிழாக்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விற்பனை செய்யலாம். |
| டேவிட் : | நீங்கள் பிறருக்கு இதைக் கற்றுக் கொடுக்கிறீர்களா? |
| தனலட்சுமி : | ஆமாம். சில தொண்டு நிறுவனங்களுக்கும் மகளிர் சுய உதவிக் குழுவினர்களுக்கும் கற்றுக் கொடுக்கிறேன். |
| குமரன் : | இந்தப் பொருட்களுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறதா? |
| தனலட்சுமி : | ஆமாம் குமரா. சணலில் தயாரிக்கும் தாம்பூலப் பைகள், ஃபைல்கள், ஃபேன்சி பேக்குகள் போன்றவற்றிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. |
| இனியா : | அக்கா உங்களின் நேரத்தை எங்களுக்காகச் செலவழித்து இந்தத் தொழிலைப் பற்றிப் புரியும்படி விளக்கிக் கூறியதற்கு மிகவும் நன்றி! |
| தனலட்சுமி : | மிக்க மகிழ்ச்சி சிறுவர்களே! போய் வாருங்கள். |

– இராம்குமார் சிங்காரம்

## செயல்பாடுகள்

- நேர்காணலை வாசியுங்கள் / கலந்துரையாடுங்கள்.
- கீழ்க்காணும் சொற்களுக்கான பொருளை அகர முதலியைப் பார்த்துக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
    - விருப்பம்
    - சணல்
    - நிறுவனம்
    - கச்சாப்பொருள்
    - முதலீடு
- பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகத் திருமதி தனலட்சுமி அவர்களை அழைக்க அழைப்புக் கடிதம் தயார் செய்யுங்கள்.
- தென்னை விவசாயியிடம் நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.
- குடிசைத் தொழிலோடு தொடர்புடைய விடுகதைகளை நூலகத்திலிருந்து சேகரியுங்கள். தொகுப்பாக்கி வெளியிடுங்கள்.

## குடிசைத் தொழில்

குடிசையில் செய்யும் தொழிலே குடிசைத் தொழில். குடும்பங்களில் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள குடிசைத் தொழில்கள் உதவுகின்றன.

கால்நடைகளை வளர்த்தல், கைத்தறி நெய்தல், பாய் பின்னுதல், தையல் வேலைகள், கூடை முடைதல், பனைப்பொருட்கள் செய்தல், தென்னையிலிருந்து பல பொருட்களைச் செய்தல்



போன்றவை குடிசைத் தொழில்களாகும். சோப்பு, ஊதுபத்தி செய்தல், சீப்பு, பற்பொடி, காகித உறைகள் செய்தலும் குடிசைத் தொழில்களாகும்.






மேலை நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி முதல் அணுசாதனங்கள் வரை குடிசைத் தொழில்களாகச் செய்யப்படுகின்றன. சுவிட்சர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் கடிகாரம், வானொலிப்பெட்டி செய்தலும் குடிசைத் தொழில்களாகும்.

ஆங்கிலேயரின் ஆட்சிக்கு முன்பு இந்திய நகரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்கின. ஆங்கிலேயர்கள் தமது நாட்டு ஆலைப் பொருட்களை இந்திய சந்தைக்கு இறக்குமதி செய்தனர். அதனால் இந்திய குடிசைத் தொழில்கள் நலிவடைந்தன.

நம் தேசப்பிதா காந்தியடிகள் கிராமத் தொழில்களே இந்தியாவைத் தன்னிறைவு அடையச் செய்யும் என நம்பினார். தமக்குத் தேவையான துணியைத் தமது கைராட்டையில் நூற்று அதை அணிந்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாய்த் திகழ்ந்தார் காந்தி.

– செந்தமிழ்

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்துக் கலந்துரையாடுங்கள்.
- கட்டுரையின் மையக் கருத்தைக் கூறுங்கள்/எழுதுங்கள்.
- இரு சொற்களாக்குங்கள்
  - பற்பொடி
  - தென்னையிலிருந்து
  - குடிசைத் தொழில்
- ஏதாவது ஒரு குடிசைத் தொழில் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.
- குடிசைத் தொழிலில் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்காக விளம்பர வாக்கியங்கள் எழுதுங்கள்.
- உங்கள் பள்ளியில் சிறுதொழில் தினத்தை ஒட்டி (ஆகஸ்ட் 30) கைவினைப் பொருட்களின் கண்காட்சி நடத்தப்படுகிறது. அதற்கான சுவரொட்டி தயாரியுங்கள்.

# தொன்று தொட்டு




## ஜலசா.....

விடிவெள்ளி நம்விளக்கு – ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் – ஜலசா
அடிக்கும் அலையே நம்தோழன் – ஜலசா
அருமைமேகம் நமதுகுடை – ஜலசா
பாயும் புயல் நம் ஊஞ்சல் – ஜலசா
பனிமூட்டம் உடல் போர்வை – ஜலசா
காயும் ரவிச்சுடர் கூரை – ஜலசா
கட்டுமரம் வாழும் வீடு – ஜலசா
பின்னல்வலை அரிச்சுவடி – ஜலசா
பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் – ஜலசா
மின்னல் இடிகாணும் கூத்து –ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை – ஜலசா
முழுநிலாதான் கண்ணாடி – ஜலசா
மூச்சடக்கி நீந்தல் யோகம் – ஜலசா
தொழும் தலைவன் பெருவானம் – ஜலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் – ஜலசா
ஒத்துமை கொண்டாடணும் – ஜலசா
உரிமையை உயர்த்திடணும் – ஜலசா

– நாட்டுப்புறப்பாடல்

### செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துக் குழுவாகப் பாடுங்கள்.
- பாடலின் கருத்துகளைக் கலந்துரையாடுங்கள்/குறிப்பு எழுதுங்கள்.
- கவிதையை முழுமையாக்குங்கள். குறிப்பேட்டில் எழுதுங்கள்.

  ஆற்றோரம் கெட்டி ஏலேலோ

  அதிலெ ஒரு மரத்தை நட்டு
- கடல் தன்னைப் பற்றிக் கூறினால் என்ன கூறியிருக்கும்? கலந்துரையாடி எழுதுங்கள்.
- 'கடலில் முத்துக் குளிப்பது ஒரு சாகசச் செயல்' இதைப் பற்றித் தகவல் திரட்டிக் குறிப்பு எழுதுங்கள்.

## அம்மி தன்வரலாறு கூறுதல்

கயல்விழி தன்னுடைய வீட்டின் வெளியே தன் செல்லக் கிளியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது யாரோ அவளைப் பெயர் சொல்லி அழைக்கும் ஓசை கேட்டது. கயல்விழி...... என்ற அழைப்பைக் கேட்டு சுற்றும் முற்றும் பார்த்தாள். அவளுடைய கிளிதான் அவளை அழைத்ததோ என்ற சந்தேகத்தோடு கிளியைப் பார்த்தாள். அது மிளகாய்ப் பழத்தை ஆவலோடு தின்று கொண்டிருந்தது. மறுபடியும் சுற்றிலும் பார்த்தாள்.

என்ன கயல்விழி சுற்றிலும் பார்க்கிறாய்? நான் தான் உன்னை அழைத்தேன் என்று மறுபடியும் சத்தம் கேட்ட திசையை நோக்கினாள். வீட்டில் சாக்கினால் மூடி வைக்கப்பட்டிருந்த அம்மிதான் அவளை அழைத்தது என்று தெரிந்ததும் வியந்தே போனாள்.



'ஓ! அம்மி நீயா என்னை அழைத்தாய்? நான் யாரோ அழைக்கிறார்கள் என்றல்லவா நினைத்தேன்' எனக் கூறினாள். அதைக் கேட்ட அம்மி, 'கயல்விழி எனக்கு ஓர் உதவி செய். என்னை மூடி வைத்திருக்கும் இந்தச் சாக்கை எடுத்து விடுகிறாயா? எனக்கு மூச்சுத் திணறுகிறது' எனக் கூறியது. அதைக் கேட்ட கயல்விழி 'ஐயோ



பாவம்! என்னை நீ முதலிலேயே அழைத்திருக்கக் கூடாதா' என்று கூறியபடியே அம்மியை மூடியிருந்த சாக்கினை அகற்றினாள். சாக்கிலிருந்து வெளியே வந்த அம்மி உஸ்...... அப்படா! எவ்வளவு சுகமாக இருக்கிறது எனப் பெருமூச்சு விட்டது.

ஏன் அம்மி இப்படிப் பெருமூச்சு விடுகிறாய்? எனக் கயல்விழி கேட்டாள். அதைக் கேட்ட அம்மி இதற்கு முன் நான் எப்படிச் சுதந்திரமாக இருந்தேன் தெரியுமா? என்று தன்னைப் பற்றிக் கூறத் தொடங்கியது.

இதற்கு முன் நான் ஒரு பெரிய கல்குவாரியில் இருந்தேன். குவாரியைக் குத்தகைக்கு எடுத்தவர் ஒரு பகுதியில் வெடிவைத்துத் தகர்த்தபோது வலித்தபடியே தெறித்து விழுந்தேன். கொஞ்சம் வலியிருந்தாலும் நானும் என்னுடைய சகோதரிகளும் மற்றவர்களுக்கு உதவப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருந்தோம். என்னையும் என்னைப் போன்ற சிலரையும் அம்மி, குழவி செய்யும் ஒருவர் விலை கொடுத்து டிப்பர் லாரியில் ஏற்றி அவருடைய வீட்டிற்குக் கொண்டு சென்றார். அங்கு வைத்து என்னைத் தன்னுடைய உளியை வைத்துச் செதுக்கத் துவங்கினார். நான் அழகாக உருவாக உருவாக அந்த வலி ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. அவர் என்னையும் என் தங்கையான குழவியையும் சந்தைக்குக் கொண்டு சென்றார். சந்தைக்கு வந்த உன் அம்மா என்னை விலை கொடுத்து வாங்கி உன் வீட்டிற்குக் கொண்டு வந்தார்.



வீட்டிற்கு வந்ததும் நன்றாகக் குளிக்க வைத்து அழகாக்கினாள். காலைச் சிற்றுண்டிக்குத் தேவையான சட்னி, குழம்பு வைக்க தேவையான பொருட்களை என் மேல் இட்டு அரைக்கத் தொடங்கினாள். அப்போது எனக்குக் கிச்சுகிச்சு மூட்டுவது போல் இருக்கும். நானும் உங்கள் சமையலுக்குத் தேவையான பொருட்களைச் சுவையாக அரைத்துக் கொடுத்தேன். வருடங்கள் கடந்தன.



ஒரு நாள் அலுவலகத்திலிருந்து கையில் ஓர் அட்டைப் பெட்டியுடன் வந்தார் உன் அப்பா. அமுதா இங்கே பார். உன் வேலைப் பளுவைக் குறைக்க உனக்கு ஒரு மிக்சி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன் எனக் கூறியபடியே அட்டைப் பெட்டியைப் பிரித்தார். பிரித்ததும் பள பளவென மின்னியபடியே வெளியே வந்த அவள் என்னைப் பார்த்தாள். அவள் வந்தவுடன் என்னைக் கவனிக்கவே இல்லை. அவள் என்னைப் பார்த்து

ஏளனமாகச் சிரித்தாள். நான் கவலையுடன் இருந்தேன். அப்போது ஒரு நாள் திடீரென மின்சாரம் தடைபட்டது. உடனே உன் அம்மா என்னிடம் ஓடி வந்து என்னைக் குளிக்க வைத்து, என்னை மறுபடியும் பயன்படுத்திய போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அன்று உன் அப்பா சாப்பிடும் வேளையில் ஆகா! என்ன இருந்தாலும் அம்மியில் அரைத்து வைத்தால் கறிகளின் சுவையே தனிதான் என்று கூறவும் நான் பெருமையுடன் மிக்சியைப் பார்த்துச் சிரித்தேன். ஆனால், மறுபடி மின்சாரம் வரவும் பழையபடி என்னை இங்கே கொண்டு வந்து இட்டனர். என்னைப் போலவே தான் என் சகோதரி ஆட்டுக் கல்லின் நிலைமையும். ஆனால் என் சகோதரிகளில் சிலர் பல இடங்களில் சிற்பங்களாக நின்று அழகூட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது என்று கூறி முடித்தது.

– வேந்தன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் அம்மி கூறியவற்றைக் கலந்துரையாடுங்கள்.
- தூய தமிழில் எழுதுங்கள்

  மிக்ஸி
- அம்மியைப் போன்ற பண்டைய கால வீட்டு உபயோகப் பொருள்களை எழுதிப் பட்டியலிடுங்கள்.
- ஆட்டுக்கல் தன் வரலாறு கூறுவதுபோல் எழுதுங்கள்.
- பரம்பரை தொழில்களைப் பாதுகாக்க நம்மால் என்ன செய்ய இயலும்? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.

## வாழ்க விவசாயி!

விதர்பனா காட்டில் அந்தப் பெரிய பள்ளிக்கூடம் இருந்தது. அங்கே அந்த வருடம் பாடம் பயின்ற அனைத்து விலங்குகளும் தங்களின் எதிர்காலம் குறித்துப் பேசிக் கொண்டன.

"நான் காட்டிலேயே திறமை வாய்ந்த மருத்துவராகப் போறேன்..." என்றது மயிலக்கா.

"நான் அழகான கட்டடங்கள் கட்டும் எஞ்சினியர் ஆகப் போகிறேன். இந்தக் காட்டிலேயே திரும்பிய பக்கமெல்லாம் நான் கட்டின கட்டடங்களாகத் தான் இருக்கும்..." என்றது கரடியண்ணன்.

இப்படி அந்த வகுப்பில் பயின்ற ஒவ்வொரு விலங்குகளும் தங்களின் வருங்கால கனவு பற்றிப் பேசிக் கொண்டிருந்தன.

இதே கேள்வி பிபு சிம்பான்சியிடம் கேட்கப்பட்டது. கொஞ்ச நேரம் யோசித்த பிபு, "நான், என் தந்தையைப் போலப் பெரிய விவசாயி ஆகப் போகிறேன்..." என்று பதில் சொல்லியது.

இதைக் கேட்ட மற்ற விலங்குகள் அனைத்தும் நகைத்தன.

பெரிய படிப்புப் படிச்சாதான் நிறைய சம்பாதிக்க முடியும். நிறைய சம்பளம் வாங்கினாத்தான் நம்மைப்பத்தி பெருமையா எல்லாரும் பேசுவாங்க. விவசாயத்தில் உனக்கு என்ன லாபம் வரும்?" என்று மற்ற விலங்குகள் வினவின.

"எனக்கு விவசாயம் பண்ண ரொம்ப பிடிக்கும். பார்த்துக்கிட்டே இருங்க... ஒரு நாள் என்னைப் பார்த்துச் சிரிச்ச நீங்களே என்னைப் பாராட்டி பேசுவீங்க.." என்று மொழிந்தது பிபு சிம்பான்சி,

வருடங்கள் பல சென்று விட்டன. அந்த வகுப்பில் பயின்ற விலங்குகள் மேற்படிப்பிற்கு, வேலைக்கு என வேறு வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டன.

பிபு சிம்பான்சி தன் விருப்பம் போலவே தன் தந்தையுடன் சேர்ந்து விவசாயம் செய்தது. விவசாயத்தில் புதுப் புது யுத்திகளைப் புகுத்தி நிறைய பயிர் விளைவித்தது.

திடீரென அந்தக் காட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அனைத்துக் கடைகளும் அங்காடிகளும் பூட்டப்பட்டு விட,





எல்லா விலங்குகளும் வேலை இழந்துவிட்டன. உண்ண உணவில்லாமல் தவித்துப் போயின. அந்தக் காட்டின் எல்லா உணவுத் தேவைகளையும் மனமுவந்து செய்தது பிபு சிம்பான்சி.

பிபுவைப் பார்த்துக் கேலி செய்த அனைத்து விலங்குகளும் தலை குனிந்தன. "உன்னைப் போன்ற விவசாயிகளால் தான் இந்த இக்கட்டான காலத்திலும் பட்டினி இல்லாமல் வாழ முடிந்தது. நீ வாழ்க! விவசாயம் வாழ்க!" எனப் பிபு சிம்பான்சியின் புகழைப் பாடின.

– அருணா கதிர்

## செயல்பாடுகள்

- நான் என் தந்தையைப் போலப் பெரிய விவசாயி ஆகப் போகிறேன் எனக் கூறியது யார்? கதைப் பகுதியை வாசித்துக் கண்டுபிடியுங்கள் / கலந்துரையாடுங்கள்.
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - நகைத்தல்
    - மொழிந்தது
    - யுக்தி
    - அங்காடி

- இரு சொற்களாக்குங்கள்.
  - பக்கமெல்லாம்
  - மனமுவந்து
  - உணவில்லாமல்
- கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  நகைத்தன
  விருப்பம்
- கதையில் வரும் கதாப்பாத்திரங்களின் பெயர்களையும் அவை தேர்ந்தெடுத்த தொழில்களின் பெயர்களையும் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- "நான் விவசாயி ஆனால்" சிறு குறிப்பு எழுதுங்கள்.
- கதையை உரையாடலாக மாற்றி எழுதுங்கள். நாடகமாக நடியுங்கள்.
- இது போன்ற கதைகளை நூலகத்திலிருந்து திரட்டிக் கதைத் தொகுப்பு உருவாக்குங்கள். வகுப்பு வாசிப்பு மூலையில் வைத்துப் பயன்படுத்துங்கள்.
- படத்திற்கு அடிக்குறிப்பு எழுதுங்கள்.











## அலகு 6

# மனிதநேயம்



நாம் ஒவ்வொருவரும் பாரத நாட்டின் குடிமக்கள்; பாரத நாட்டில் நன்கு வாழும் உரிமையும் நாட்டைப் பாதுகாக்கும் கடமையும் உடையவர்கள். உரிமையும் கடமையும் உடைய நாம் தேசப்பற்றுடன் வாழ்தல் வேண்டும். நாட்டின் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். சக மனிதர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

# விடியல்



## விடுதலை இயக்கப் பாடல்கள்

எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே– இதை
வந்தனை கூறி மனதில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ? – இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்
ஈந்ததும் இந்நாடே – எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே – அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே – தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி இல்
போந்ததும் இந்நாடே – இதை
"வந்தே மாதரம் வந்தே மாதரம்"
என்று வணங்கேனோ?

மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே – அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே – மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே – பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே – இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

– பாரதியார்

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதியார் |
| இயற்பெயர் | : | சுப்பிரமணியன் |
| பிறப்பு | : | 1882–ஆம் ஆண்டு டிசம்பர் 11–ஆம் தேதி |
| ஊர் | : | தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் |
| தந்தை | : | சின்னச்சாமி ஐயர் |
| தாய் | : | இலக்குமி அம்மாள் |
| முக்கியப் படைப்புகள் | : | கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் |
| இறப்பு | : | 1921–ஆம் ஆண்டு செப்டம்பர் 11–ஆம் தேதி |

## செயல்பாடுகள்

- பாடலைப் பலவிதமான மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் எவை? கலந்துரையாடுங்கள். கூறுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரியைப் போன்று கவிதையிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.

  இருந்ததும், முடிந்ததும்

- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - வந்தனை
  - மழலை
  - களித்தல்
- கீழ்வரும் சொற்களை இரு சொற்களாக எழுதுங்கள்.
  - இந்நாடே
  - பொன்னுடல்
  - இன்னுயிர்
  - இல்லறம்

- நாட்டுப்பற்றுத் தொடர்பான பாடல்களை நூலகப் புத்தகங்களிலிருந்து சேகரியுங்கள். வகுப்பில் வெளியிடுங்கள்.
- இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களின் படங்களைச் சேகரித்து மலர் வெளியிடுங்கள்.

## வெள்ளைக்கார விஞ்சு துரையும் விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரம்பிள்ளையும்

(வெள்ளக்கார அரசு அதிகாரி விஞ்சு துரையின் அடக்குமுறைக் கூற்றாகவும், அதற்கு விடுதலை வீரர் வ.உ.சிதம்பரம்பிள்ளையின் மறுமொழியாகவும் பாரதியார் இரண்டு பாடல்கள் பாடியுள்ளார். அவ்விரு பாடல்களையும் இணைத்து இப்பாடப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.)

துரை : நாட்டில் எங்கும் சுதந்தர வாஞ்சையை
நாட்டினாய்– கனல் – மூட்டினாய்
வாட்டி உன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் வலி – காட்டுவேன்

வ. உ. சி : சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ தெய்வம் பார்க்குமோ

துரை : கூட்டம்கூடி வந்தே மாதரமென்று
கோஷித்தாய் எமைத் தூஷித்தாய்
ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் – பொருள் – ஈட்டினாய்



வ. உ. சி : வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம் முடி – தாழ்த்துவோம்
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ? அவ – மானமோ?

துரை : சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன் – குத்திக் – கொல்லுவேன்
தட்டிப் பேசுவார் – உண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன் – பழி – கொள்ளுவேன்

வ.உ.சி. : சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம்
சாயுமோ? ஜீவன் – ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மகாபக்தி
ஏகுமோ? – நெஞ்சம் – வேகுமோ?

துரை : அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்; புன்மை – போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய் – ஆசை – ஊட்டினாய்

வ.உ.சி : நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? – பன்றிச் – சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்களோ? இது
நீதமோ? – பிடி – வாதமோ?

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசியுங்கள். கலந்துரையாடுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரியைப் போன்று இறுதி எழுத்து ஒரே போல் வரும் சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.

  நாட்டினாய் – மூட்டினாய்

- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - வாஞ்சை
  - கனல்
  - அடிமை
  - துஞ்சிடோம்
  - சேய்
  - கோஷித்தல்
  - தூஷித்தல்
  - ஈனம்
  - புன்மை
- பாடப்பகுதியை வாசித்து வகுப்பறையில் நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
- கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களைப் பற்றி தகவல் திரட்டி சிறுகுறிப்பு எழுதுங்கள்.

## நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்



வங்கத்தைப் பிறப்பிடமாய்க் கொண்டு 1897–ஆம் ஆண்டு சுபாஷ் சந்திர போஸ் பிறந்தார். சின்னஞ்சிறு வயது முதல் இறைபக்தி, எளிமை, துயர்படுவோரைக் கண்டு வாடும் மனம் உடையவர். பல புத்தகங்களை விரும்பிப் படிப்பவர். ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோர்களின் அறிவுரைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர்.

கல்லூரியில் பயிலும்போது மாணவர் தலைவராக விளங்கினார். 1919–இல் பி. ஏ பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்பு இங்கிலாந்து சென்று ஐ.சி.எஸ் படித்தார். இவரது உயர்ந்த கொள்கைகளையும் ஆன்மீகத் தன்மையையும் கண்ட அவர்கள் நகைச்சுவை இல்லாத மனிதன் என மொழிந்தனர். காந்தியடிகளின் சுதந்திர வேட்கைக்கு உதவும் வகையில் ஐ.சி.எஸ் பணியை உதறிவிட்டு தாயகம் திரும்பினார்.

1922–இல் காங்கிரசில் சேர்ந்து "இளைஞர் கட்சி" ஒன்றைத் தொடங்கினார். தேசபந்து சித்தரஞ்சன்தாசை அரசியல் குருவாக ஏற்றார். காங்கிரசின் கொள்கை பிடிக்காததால் "சுயராஜ்ய கட்சி" எனும் ஒன்றைத் தொடங்கினார்.

1924–இல் இவர் நடத்திய போராட்டத்தால் சிறைக்குச் சென்றார். பின்பு வெளியே வந்ததும் மறுபடியும் ரங்கூனில் மாண்டலே சிறையில் அடைக்கப்பட்டார். ஒத்துழையாமை இயக்கத்தில் இவர் கைது செய்யப்பட்ட போது நீதிபதி ஆறு மாதம் சிறை எனக் கூற "நான் என்ன கோழிக் குஞ்சையா திருடினேன்? எனக்குத் தண்டனை ஆறுமாதம் தானா" எனத் துணிவுடன் கேட்டுச் சுதந்திர முழக்கம் செய்தார். பல்வேறு முறை சிறை சென்றதால் சிறையிலிருக்கும் போதே முதுகுவலி, வயிற்றுவலிக்கு ஆளானார்.

மீண்டும் மீண்டும் சிறையிலடைத்துக் கொண்டிருப்பது கண்டு வெறுப்படைந்து அந்நிய நாட்டின் உதவியுடன் ஆங்கிலேயரை வெல்ல வேண்டும் எனக் கருதினார். காபூலுக்குத் தப்பிச் சென்றார். அங்கிருந்து இத்தாலிக்குச் சென்றார். பின்பு ஜெர்மனிக்குச் சென்று, அங்கிருந்து கொண்டு வானொலியில் பேச இந்தியர்கள் உள்ளம் மகிழ்ந்தனர். ஆங்கிலேயர் எரிச்சலடைந்தனர்.

ஜெர்மானியர் இவரை "எக்ஸலென்சி" என்றும் "நேதாஜி" என்றும் அழைக்கும் போது இவர் பதிலுக்கு "வந்தே மாதரம்" என்பார். 1943–இல் "இந்திய தேசியப்படையை" ஆரம்பித்து, ஜப்பான் உதவியுடன் இந்திய நாட்டிற்கு வந்து ஆங்கிலேயரைத் தாக்கலானார். மழை காரணமாகவும் மற்றும் சில பிரச்சினைகள் காரணமாகவும் பின்னடைவு ஏற்பட்டது. போரைக் கைவிட்டு டோக்கியோ சென்றார்.

1945–ஆம் ஆண்டு ஆகஸ்டு 18–ஆம் நாள் பார்மோசாவில் இறங்கிப் புறப்பட்ட அவர் விமானம் விபத்திற்குள்ளானது. சுபாசுக்கு மிகுந்த காயம் ஏற்பட்டது. காயம் பட்ட நிலையிலும், நான் இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபடுவேன். அது விரைவில் கிடைக்கும். சுதந்திர இந்தியா வாழ்க என மொழிந்தார். அந்த விபத்தில் அவர் உயிர் இழந்தாரா, உயிர்ப் பிழைத்தாரா என்பது இன்றும் ஒரு புதிராகவே உள்ளது. நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக் காரணமாக இருந்த முக்கியமானவர்களில் சுபாஷ் சந்திரபோசும் ஒருவர்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வகுப்பறையில் கலந்துரையாடுங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் வரும் வாக்கியங்களைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.
  - விடுதலை
  - தியாகம்
  - போராட்டம்
  - எளிமை
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - வேட்கை
  - முழக்கம்
  - எரிச்சல்
- பாடப்பகுதியை வாசித்து நேதாஜி தொடர்பான ஐந்து வினாக்கள் தயார் செய்யுங்கள்.
- பள்ளியில் நடைபெறும் சுதந்திரதின விழாவிற்கு ஒரு நிகழ்ச்சி நிரல் தயார் செய்யுங்கள்.
- சுதந்திர தின விழாவை முன்னிட்டுப் பள்ளியில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் 'நேதாஜியின் வாழ்க்கை' எனும் தலைப்பில் பேசுவதற்கு ஒரு சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- சுதந்திரப் போராட்ட வீரர்களின் படங்களைச் சேகரித்து மலர் வெளியிடுங்கள்.

# நல்வழி



## மனித நேயம்

நேயமது இருந்தாலே அன்பு தோன்றும்
நேயமது இருந்தாலே பணிவு தோன்றும்
நேயமது மக்களோடே இணைந்து விட்டால்
நிதம்தோன்றும் பூசல்களும் மறைந்து போகும்
நேயத்தால் எல்லையெலாம் மறைந்து போகும்
நீஎன்னும் நான்என்னும் பிரிவு நீங்கும்
மதம் சாதிப் பிரிவுகாட்டும் கெட்ட
மனத்தவரை நீக்கி வைப்போம் நமக்குள்ளாக
விதம்விதமாய் இருக்கின்ற ஏற்றத்தாழ்வு
வேற்றுமைகள் நீக்கிடுவோம் அன்பு கொள்வோம்
கண்ணிரண்டே ஆனாலும் காட்சி ஒன்றே
காலிரண்டே ஆனாலும் பயணம் ஒன்றே
மனமிருண்டு போகின்ற மோதல் வேண்டா
உலகமெலாம் ஆன்மநேயம் வளர்ச்சி பெற்றால்
உண்மையிலே நல்வாழ்வு கிடைக்கு மன்றோ
நிலவுலகம் நல்வழியை ஏற்றுக் கொண்டால்
நிச்சயமாய் நல்லமைதி சிறப்புத் தோன்றும்.

– இரா. தனசேகரன்

## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- கவிதையில் உங்களுக்குப் பிடித்த அடி எது? காரணத்தைக் கூறுங்கள்.
- கவிதையில் வரும் ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- மனிதனிடம் இருக்க வேண்டிய நற்பண்புகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- பாடலை முழுமையாக்குங்கள். குறிப்பேட்டில் எழுதுங்கள்.

  துன்புறும் வேளையிலே
  துணைவருவோர் உள்ளம்தான்
  நன்னலஞ்செய் தெய்வமெனச் சொல்லீர்
  அந்த நற்பண்பில் மனித நேயம் கொள்வீர்.

## ஓநாய் செய்த உதவி

உழவன் ஒருவன் ஒரு நாய் வளர்த்து வந்தான். அதற்கு மணி என்று பெயரிட்டான்.

அது அவனுக்குப் பலவிதங்களில் உதவி செய்து வந்தது.

இரவில் கள்வர் பயமின்றி அவனுடைய வீட்டையும் உடைமைகளையும் விழித்த கண் மூடாமல் இருந்து பாதுகாக்கும். பகலில் வீட்டுத் தோட்டத்திலுள்ள செடிகளை ஆடுமாடுகள் வந்து மேயாமல் துரத்திவிடும். உழவனும் அவன் மனைவியும் வயலுக்குச் சென்றால் குழந்தையைப் பார்த்துக்கொள்ளும். இவ்வாறு ஆண்டுகள் பல கழிந்ததால் மணிக்கு வயதாகி விட்டது. அந்த நாயால் இனிமேல் பயன் இல்லை. அதற்குப் போடும் சோறு தண்டச்சோறு என நினைத்த உழவன் அதை வீட்டிலிருந்து விரட்டி விட்டான்.

மனம் உடைந்த மணி தெருக்களிலும் காடு மேடுகளிலும் அலைந்து திரிந்தது. பசியால் பரிதவித்தது.

அப்போது ஓநாய் ஒன்று அப்பக்கம் ஓடி வந்தது. ஓடி வந்த ஓநாய் முகம் வாடி இருந்த நாயைப் பார்த்துக் கேட்டது. நண்பா ஏன் இளைத்துக் காணப்படுகிறாய்? உன் கஷ்டம் என்ன? சொல் என்றது.

மணி சொன்னது... பல ஆண்டுகள் என் தலைவனுக்காக உழைத்தேன். வயதான காலத்தில் எனக்கு ஒரு பிடி உணவு கொடுக்க விரும்பாமல் என்னை வீட்டிலிருந்து விரட்டிவிட்டார்கள். சே......, மனிதர்களே இப்படித்தான் போலும், கொஞ்சம் கூட நன்றி

இல்லாதவர்கள். என் எதிர்காலமே இருண்டு கிடக்கிறது. நான் என்ன செய்வேன்?

அதைக் கேட்ட ஓநாயின் உள்ளம் உருகியது. "நண்பா உன் நிலைமைக்காக வருந்துகிறேன். இந்தக் காலத்தில் மனித இனத்தின் பண்பாடு நலிவடைந்து வருகிறது. சிலர் தன் பெற்றோர்களையே வயதாகிவிட்டால் விரட்டி விடுகிறார்கள். அப்படியிருக்க விலங்குகளாகிய நம்மிடம் அன்பு காட்டுவார்கள் என எதிர்பார்ப்பது முட்டாள்தனம். நீ விரும்பினால் நான் உனக்கு உதவி செய்கிறேன். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி செய்தால் உன் தலைவன் உன்னை மீண்டும் வீட்டில் வைத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது" என்றது.

"அண்ணா உனக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். உன் திட்டத்தைச் சொல் அதன்படி நடப்பேன்" என்றது நாய்.

நல்லது. என் திட்டத்தைக் கேள்.

"இன்னும் சில நாள்களில் உன் தலைவனும் அவர் மனைவியும் அறுவடைக்காக வயலுக்குப் போவார்கள். அப்போது அவர் மனைவி தன் கைக்குழந்தையை மரநிழலில் உறங்கவைத்து விட்டு வயலில் வேலை செய்வாள். அச்சமயம் பார்த்து நான் ஓடிவந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடுவேன். நீ என்னைத் துரத்திக் கொண்டும் குரைத்துக் கொண்டும் ஓடிவா. சிறிது தூரம் ஓடியதும் நான் குழந்தையைப் போட்டுவிட்டு ஓடிவிடுவேன். நீ குழந்தை இருக்கும் இடத்தில் அதற்குப் பாதுகாப்பாக நில். இதைப் பார்க்கும் உழவனும் அவர் மனைவியும் ஓடிவந்து குழந்தையைத் தூக்கிச் செல்வதுடன்,உன்னால் தான் தங்கள் குழந்தை உயிர் பிழைத்தது என நினைத்து உன்னை மீண்டும் வீட்டிற்கு அழைத்துக் கொள்வார்கள்" என்றது.





அதைக் கேட்ட மணி மகிழ்ச்சியுடன் அவ்வாறே செய்வதாக வாலை ஆட்டியது.

சில நாள்கள் சென்றன. அறுவடைக்காலம் வந்தது. உழவனும் அவன் மனைவியும் கைக்குழந்தையுடன் வயலுக்குச் சென்றனர். மரநிழலில் குழந்தையைப் படுக்க வைத்துவிட்டு வேலை செய்யச் சென்றாள் உழவனின் மனைவி.

முன்னர் சொன்னது போல் ஓநாய் ஓடிவந்து குழந்தையைக் கவ்விக் கொண்டு ஓடியது.

எதேச்சையாக அங்கு வருவது போல் மணி ஓடிவந்தது. ஓநாய் குழந்தையை எடுத்துச் செல்வதைக் கண்டு, மணி குரைத்துக் கொண்டே அதைத் துரத்தியது.

சிறிது தூரம் சென்றதும் ஓநாய் குழந்தையை விட்டு விட்டு ஓடிவிட்டது.

உழவனும் அவன் மனைவியும் ஓடிவந்தனர். தங்கள் குழந்தையைக் காப்பாற்றியது மணிதான் என எண்ணினர்.

மணிக்கு நன்றி செலுத்தும் வகையில் மீண்டும் அதைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அது இறக்கும் வரையிலும் தங்கள் இல்லத்திலே வைத்துக் காப்பாற்றினர்.

ஓநாய் செய்த உதவியால் மணிக்கு மறுவாழ்வு கிடைத்தது.

(குட்டிக் கதைகள் தொகுப்பு)

## செயல்பாடுகள்

- கதையை வாசித்து நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- கதையில் வரும் கதாப்பாத்திரங்களைக் கூறுங்கள். எழுதுங்கள்.

- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
    - கள்வர்
    - தண்டச்சோறு
    - இளைத்து
    - யோசனை
- நாய்/ பூனைகளை வீட்டில் வளர்ப்பதால் நாமடையும் நன்மைகள் என்னென்ன? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- உங்களது வீட்டில் செல்லப் பிராணிகள் உண்டா? அதைப் பற்றி குறிப்பு எழுதுங்கள்.
- கீழே உள்ள சொற்களை இரு சொற்களாக மாற்றி எழுதுங்கள்.
    - பயமின்றி
    - வீட்டிலிருந்து
    - அச்சமயம்
    - நலிவடைந்து
    - வாய்ப்பிருக்கிறது
    - அறுவடைக்காலம்
- இப்பாடப் பகுதியில் வரும் கதையின் முடிவை மாற்றிக் கூறுங்கள்/ எழுதுங்கள்.
- தனக்கு உதவிய ஓநாயை நினைத்துப் பெருமைகொண்ட மணி... அன்று ஒரு நாட்குறிப்பு எழுதியிருந்தால் என்னென்ன எழுதியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து எழுதுங்கள்.

## உறுதிமொழி

உலக மனித உரிமை நாளான டிசம்பர் 10, வெள்ளிக்கோடு அரசு உயர் தொடக்கப் பள்ளி மாணவர்கள் பள்ளிக்கூடக் காலைக்கூட்டத்தில் கூறிய உறுதிமொழி.

நாம் அனைவரும் சமஉரிமை உடையவர்கள். ஆகவே ஒருவரையொருவர் மதிக்க வேண்டும். ஒருவரையொருவர் அடக்க முயலக் கூடாது.

இந்த உலகில் பிறந்த எல்லா உயிரினங்களும் வாழ உரிமை உடையவை. எனவே அவற்றுக்குத் தீங்கு செய்யவோ, கொல்லவோ கூடாது.

இயற்கை ஒரு வரம் ஆகும். அந்த இயற்கையை அழிப்பதோ தீங்கு செய்வதோ கூடாது. நெகிழிப் பொருட்களை எரித்தல் கூடாது. அவற்றைப் பொருத்தமான முறையில் அழிக்க வேண்டும்.



மனிதர்கள் முறையான வாழ்வு வாழ எழுதப்பட்டவை சட்டங்கள். அந்தச் சட்டங்களை நாம் மதிக்க வேண்டும். குழந்தைகள், பெண்கள், முதியோர்களை மதிக்க வேண்டும். ஆதரவற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

இயற்கையைப் பாதுகாப்பது என் கடமை. உயிரினங்களுக்கு ஊறு செய்யாமலிருப்பது என் கடமை. சட்டங்களை மதிப்பது என்கடமை என்பதை நான் உளமார நம்புகிறேன். இக்கடமைகளை நான் என்றும் கடைபிடிப்பேன் என உறுதி கூறுகிறேன்.

## செயல்பாடுகள்

- உறுதிமொழியை வாசித்துக் கலந்துரையாடுங்கள்.
- கீழ்க்காணும் சொற்களை வாக்கியத்தில் அமையுங்கள்.
    - இயற்கை
    - சட்டம்
    - மதித்தல்
    - உதவிக்கரம்
    - ஒற்றுமை.
- மனித உரிமை தினத்தில் பள்ளியில் நடக்கும் விழாவைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கச் சுவரொட்டி ஒன்று தயார் செய்யுங்கள்.
- மனித உரிமை தினத்தை முன்னிட்டுப் பள்ளியில் நடந்த நிகழ்ச்சியைப் பத்திரிகையில் வெளியிட பத்திரிகைச் செய்தி தயார் செய்யுங்கள்.

# கடமை



## குடிமகன்

இந்திய நாட்டின் குடிமகனாய்
இருக்கும் மனிதர் எல்லோரும்
சிந்தையில் கொண்டு செயலாற்றும்
சீரிய கடமைகள் கற்றிடுவோம்

நாட்டுப் பாது காப்பிற்கு
நன்றாய் உதவி செய்திடுவோம்
போட்டுப் பிரிக்கும் வரிகளினைப்
பாக்கி யின்றிக் கொடுத்திடுவோம்

தேர்தல் வந்தால் வாக்களித்து
தகுந்த தலைமை தேர்ந்திடுவோம்
பார்க்கும் அனைத்துப் பொதுச்சொத்தும்
பாழா காமல் காத்திடுவோம்

உயர்ந்த நினைவுச் சின்னங்கள்
உடைந்தி டாமல் பேணிடுவோம்
இயற்கை வளங்கள் அழியாமல்
என்றும் பாது காத்திடுவோம்

உதிக்கும் நமது நினைவுகளில்
உண்மை தேசியம் நிறையட்டும்
சுதந்திர இந்தியா ஒற்றுமையின்
சொர்க்க பூமியாய்த் திகழட்டும்.

– கொற்றை வளவன்

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் எவை? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.
- நீங்கள் பெரியவர்களாகும் போது நாட்டிற்காக என்னென்ன செய்வீர்கள்? கலந்துரையாடுங்கள். குறிப்பு எழுதுங்கள்.
- பாடலை முழுமையாக்குங்கள். குறிப்பேட்டில் எழுதுங்கள்.

  நாட்டின் தலைவன் நான் ஆனால்
  எங்கும் ஒற்றுமை ஓங்கிடச் செய்வேன்.

## கடமையில் கருத்து

'இரும்பு மனிதர்' என அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் பட்டேல் கடமையை நிறைவேற்றுவதில் உறுதி கொண்டவர். எவ்வித இடையூறுகள் குறுக்கிடினும் செய்ய வேண்டியதை அவ்வப்போது செய்து விடுவார்.

பட்டேல் வழக்கறிஞராகத் தொழில் பார்த்து வந்த காலம் நீதிமன்றத்தில் அவர் ஒரு வழக்கை நடத்திக் கொண்டிருந்தார். அந்நேரம் தந்திச் சேவகன் ஒருவன் அங்கே வந்து அவரிடம் ஒரு தந்தியைக் கொடுத்தான். அதைப் பிரித்துப் படித்து விட்டு மீண்டும் வழக்கைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்.

பட்டேலின் நண்பர்களும் ஏனையவர்களும் அந்தத் தந்தியைப் பார்த்துத் திகில் கொண்டார்கள். அது ஏதேனும்



ஒரு துயர நிகழ்ச்சியை அறிவிக்கும் செய்தியாகவே இருக்கும் என்பது அவர்கள் ஊகம். ஏனெனில் அக்காலத்தில் பெரும்பாலும் துயரச் சம்பவங்களை அறிவிக்கவே மக்கள் தந்தியைப் பயன்படுத்தி வந்தனர்.

தந்தியைப் பிரித்துப் பார்த்த பட்டேலின் முகத்தில் எவ்வித மாறுதல்களும் தென்படவில்லை. அவர் வழக்கை நடத்துவதிலேயே உன்னிப்பாக இருந்தார்.

சர்தார் பட்டேலின் மனைவி காலமாகிவிட்டார் என்பதாக இருந்தது தந்திச் செய்தி. இச்செய்தியைக் கேட்ட நண்பர்கள் திகைப்பும் வியப்பும் கொண்டனர். தம் மனைவி இறந்த செய்தி அறிந்தும் தன்துயரத்தை எல்லாம் மறைத்துக் கொண்டு மற்றவர்களுக்காகத் தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றிய அவரை மக்கள் வாயார வாழ்த்திப் போற்றினர்.

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்துக் கருத்துகளைக் கலந்துரையாடுங்கள்.
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - இடையூறு
  - உன்னிப்பாக
  - சேவகன்
  - திகைப்பு
  - திகில்
- பாடப்பகுதியை வாசித்து வினாக்கள் உருவாக்குங்கள்.
- நமது கடமைகள் யாவை? கலந்துரையாடுங்கள். எழுதுங்கள்.

## பொதுச்சொத்தைப் பாதுகாப்போம்

ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் வகுப்பறை மேசைகளை இழுத்தும் குதிரைகளைக் கீழே தள்ளியும் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களை அமைதிப்படுத்துவதற்காக அவர்களது வகுப்பாசிரியை வகுப்பறையினுள்ளே சென்றார்.

வகுப்பாசிரியை : பிள்ளைகளே, அமைதியாக இருங்கள். அரசாங்கம் உங்களுக்குப் பயன்படுத்தத் தருகின்ற பொதுச் சொத்துகளை இவ்வாறு சேதமாக்கக் கூடாது. இவற்றை நீங்களும் உங்களுக்குப் பின்னர் வரும் சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் பேணிப் பாதுகாக்க வேண்டும்.



மோகன் : பொதுச்சொத்து என்றால் என்ன டீச்சர்? நீங்கள் அதற்கு விளக்கம் தருவீர்களா?

வகுப்பாசிரியை : நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் பயன்படுத்தும் பொருட்டு அந்நாட்டு அரசினால் வழங்கப்படும் பொருள்கள், கட்டடங்கள், வாகனங்கள், நீர் வழங்கும் குழாய்கள், நூல்நிலையங்கள், பூங்காக்கள், பொதுக் கிணறுகள் போன்றவற்றைப் பொதுச் சொத்துக்கள் எனலாம்.

அன்வர் : எங்களுக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து கல்வி கற்பதற்கு வழங்கப்படும் பாடப் புத்தகங்கள், வகுப்பறைகள் என்பவையும் பொதுச் சொத்துகளுள் அடங்குமா?

வகுப்பாசிரியை : ஆமாம். உங்களுக்கு இலவசமாகத் தருகின்ற பாடநூல்களை நீங்கள் கிழிக்காமல் மிகவும் கவனமாக உபயோகித்து அடுத்து வகுப்பேற்றம் பெற்று வரும் மாணவர்களுக்கு அவற்றைக் கொடுத்து உதவவேண்டும்.

வில்சன் : இவை போன்றுதான் நாங்கள் ஏனைய பொதுச் சொத்துகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டுமா?

வகுப்பாசிரியை : ஆம். இரவிலே உங்களுக்கு வெளிச்சம் தருவதற்காக, வீதிகளிலே அமைக்கப்பட்டிருக்கும் மின் விளக்குகளை எவரும் கல்லெறிந்து உடைக்கக் கூடாது. உடைத்தால் இரவிலே நடமாடும் பயணிகள் மிகவும் சிரமத்திற்குள்ளாவார்கள். அவர்கள் மட்டுமல்ல நீங்களும் இரவில் பயணம் செய்யும்பொழுது சிரமப்படுவீர்கள்.

அன்வர் : இங்கே பாருங்கள். யாரோ? இந்தக் கட்டடத்தின் ஒரு பக்கச் சுவரில் பெரிய துளை ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

வகுப்பாசிரியை : இவ்வாறு செய்வதால் கட்டடச் சுவரின் அழகு கெட்டு விடுமல்லவா? சிலர் தேவையற்ற விடயங்களை எல்லாம் சுவர்களில் எழுதுவார்கள்; கீறுவார்கள். இதனால் யாருக்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது?

மோகன் : ஆமாம். நீங்கள் சொல்வது சரிதான் டீச்சர். நாம் பிறர் பொருளையும் நம் பொருள் போலக் கருத வேண்டும். நமது பொதுச் சொத்துகளான சந்தைகள், நூல் நிலையங்கள், பூங்காக்கள் போன்றவற்றைப் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

வகுப்பாசிரியை : உண்மைதான். சந்தைக் கட்டடங்களையும் அதன் சுற்று வட்டாரத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அதனால் அங்குப் பொருள் விற்க வருவோரும் வாங்க வருவோரும் நன்மை அடைவர் அல்லவா?

அன்வர் : அதைப் போலவே நூல் நிலையங்களில் உள்ள நூல்களையும் பேணுதல் வேண்டும். நான் கூறுவது சரிதானே டீச்சர். ஒரு நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுப்பது அந்நாட்டில் வாழுகின்ற கல்விமான்களே!

வகுப்பாசிரியை : ஆமாம். ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்கள் கற்ற கல்வியிலேயே அடங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக

அமையும் நூல்களை நாம் கண்களைப் போல் போற்றுவது கடமையாகும். மக்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தும் வரிப்பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்துகள் யாவும் நாட்டு மக்கள் அனைவருக்கும் உரித்தான பொதுச் சொத்துகள் ஆகும். அப்பொதுச்சொத்துகளை நமது சொத்துகளாக நாம் நினைத்துப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

## செயல்பாடுகள்

- உரையாடலை வாசித்து வகுப்பறையில் கலந்துரையாடுங்கள். கூறுங்கள்.
- பாடப்பகுதியில் வரும் கதாப்பாத்திரங்களின் பெயர்களைக் கூறுங்கள். எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள பொதுச்சொத்துகளைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்துங்கள்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை இரு சொற்களாக மாற்றுங்கள்.
  - வகுப்பாசிரியர்
  - கல்லெறிந்து
  - தேவையற்ற
  - கடமையாகும்
- பொதுச்சொத்துகளைப் பாதுகாத்த அனுபவம் உங்களுக்கு உண்டா? அதை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- 'பொதுச் சொத்து' எனும் தலைப்பில் பள்ளியில் நடைபெறும் கருத்தரங்கிற்குப் பொது மக்களை அழைக்கும் விதத்தில் ஒரு துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.
- "பொதுச்சொத்தைப் பாதுகாத்தல்" எனும் தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் பேசுவதற்கு ஒரு சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.



## அகரமுதலி

அகழி – நீர் நிரம்பிய கொடும்பள்ளம்
அங்காடி – கடை
அடிமை – உரிமை இழந்து பிறருக்கு வேலை செய்யும் நபர்
அவா – ஆசை
ஆதரவு – உதவி
ஆர்வம் – விருப்பம்/ நாட்டம்/ ஈடுபாடு
ஆனந்தம் – பேரின்பம் / இன்பம்
இடையூறு – தடை
இல்லம் – வீடு
இளைத்து – மெலிந்து
ஈந்து – கொடுத்து
ஈனம் – தாழ்வு/ இழிவு
உன்னிப்பாக – கவனமாக /கூர்மையாக
எரிச்சல் – கோபம்
எழில் – அழகு
ஏளனமாக – கேலியாக/ நகைப்பாக
ஏற்றம் – உயர்ச்சி
கச்சாப்பொருள் – ஒன்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருள்
கதிரவன் – சூரியன்
கழனி – வயல்
கள்வர் – திருடர்
களரி – கூத்து நிகழும் இடம்
களித்தல் – மகிழ்தல்
களைப்பு – சோர்வு
கனல் – நெருப்பு
குடியானவர்கள் – மக்கள் /குடிமக்கள்
கைவண்ணம் – கலைப்படைப்பு
கோஷித்தல் – ஆரவாரித்தல்
சணல் – நார் தரும் ஒரு செடிவகை
சிறார் – சிறுவர்
செவி – காது
சேய் – குழந்தை,வாரிசு
சேவகன் – ஊழியன்
சோடனை – அலங்காரம்
தண்டச்சோறு – பயனற்றவனுக்கு இடும் உணவு
தரணி – உலகம்
தழைத்து – செழித்து
திகில் – பீதி/ பேரச்சம்
திகைப்பு – வியப்பு/ பிரமிப்பு
திறமை – திறம்/ மேன்மை
தூஷித்தல் – பழித்தல்/ தூற்றுதல்
தொழுகின்ற – கும்பிடுகின்ற
தொழுவம் – மாட்டுக் கொட்டில்
நகைத்தல் – சிரித்தல்/ நிந்தித்தல்
நலிய – தாழ்வடைய/ வறுமையடைய
நிகர் – சமம்/ ஒப்பு
நிசி – இரவு/இருள்
நிறுவனம் – வணிகத்தில் ஈடுபடும் ஓர் அமைப்பு
நேர்த்தியாக – ஒழுங்காக
பஞ்சம் – உணவு கிடைக்காத நிலை
பரோபகாரி – பிறர்க்கு உதவி செய்பவன்/ கொடையாளர்
பழமை – தொன்மை
பாங்கு – அழகு
புகழ்தல் – பாராட்டுதல்
புன்மை – சிறுமை/ இழிவு
பெட்டகம் – உறுதியான இரும்புப் பெட்டி
பேணுதல் – போற்றுதல்/ பாதுகாத்தல்
மங்கை – பெண்
மத்தகம் – யானையின் நெற்றி
மழலை – குழந்தை
முதலீடு – தொழில் தொடங்கத் தேவைப்படும் பணம் மற்றும் பொருள்
முழக்கம் – ஆரவாரம்/ பேரொலி
மொழிந்தது – கூறியது
யுக்தி – உத்தி/ தந்திரம்
யோசனை – உபாயம்/ புத்திமதி/ அறிவுரை
யோசிக்க – சிந்திக்க
ரங்கோலி – வண்ணப்பொடிக் கோலம்
வந்தனை – வணக்கம்
வலைஞர் – மீன் பிடிப்போர்
வறுமை – இல்லாமை /ஏழ்மை
வாஞ்சை – ஆசை/ பற்று
விமர்சை – ஆடம்பரம்
வியக்க – அதிசயிக்க /ஆச்சரியப்பட
விருப்பம் – ஆசை
வேட்கை – விருப்பம்

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,
கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்–1098, கிரைம் ஸ்டோப்பர்–1090, நிர்பயா–1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471–324300/44000/45000**

*Online **R. T. E Monitoring** : **www.nireekshana.org.in***